"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம் :1876

# சத்தியவேத பாதுகாவலன்

"கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

சத்தியவேத பாதுகாவலன்

வருடசந்தா

இலங்கை: வெளிநாடுகள் :

ரூபா 9-00

(தபாற்செலவு உட்பட)

தனிப்பிரதி சதம் 15

89-ம் புத்தகம் | யாழ்ப்பாணம், 1964-ஆ தை மாதம் 18-ந்வ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 3-ம் இலக்கம்

# பரிசுத்ததந்தையின் பலஸ்தீன திருயாத்திரை

(சென்றவாரத் தொடர்ச்சி)

## நசரேத்தில்

கிறீஸ்துவின் பாலபருவம் இடம்பெற்ற நசரேத் நகருக்கு பாப்பரசர் தமது புனித யாத்திரையின் இரண்டாவது தினமான 5-ந்தேதி ஞாயிறு காலை சென்றார். மன்னர் ஹூசேயின் ஜோர்தானிலிருந்து புறப்படும் பாப்பரசரை மகிழ்ச்சியுடன் அனுப்பி வைத்தார்.

பாப்புவின் ஊர்வலம் ஜோர்தான் இஸ்ருயேல் எல்லையை அடைந்தபோது இருபகுதி மக்களும் ஆரவாரித்தனர். 15வருட காலமாக முத்திரையிடப்பட்டிருந்த ராஜுக்வாயில் அன்றுதினம் பாப்புவின்வருகைக்காகத்திறந்துவிடப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இஸ்ருயேல் அதிபர் சாஸர், பிரதம மந்திரியுடன் காத்துநின்றார். பாப்புவின் இரதம் அண்மையில் வந்ததும் தலைகுனிந்து பாப்புவுக்குகைலாகு தந்து வரவேற்றார். "கர்த்தருடைய நாமத்திஞல் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்ற ஹீப்ரு வார்த்தைகளை உச்சரித்து பாப்புவை வரவேற்றார். பின்னர் அதிபர் கூறியதாவது:

"மனிதரிடையே அமைதி நிலவ, உலகில் சமாதானம் ஓங்க, மனித உரிமைகள் மதிக்கபபட, நீதிநிலவ, பிரார்த்தனை செய்யும்படி இப்புண்ணிய பூமிக்கு வந்திருக்கிறீர்களென அறிந்து பெருமகிழ்வெய்துகின்றோம். நீதியின் மேலும் சமாதானத்தின் மீதும் தாகமுள்ளவர்களாகிய தங்களின் வரவு எங்கள் நாட்டை மேலும் புனிதப்படுத்தியுள்ளது. உலகெங்கணுமுள்ள நல்லெண்ணம் கொண்ட மனிதர்களனைவரும் ஆசிக்கும் சமாதான முயற்சிகள் கைகூடும் என்பதில் எங்களுக்கு அசைக்கமுடியா நம்பிக்கையுண்டு"

பாப்பரசர் தமதுரையில் தமது யாத்திரையின் நோக்கம் முற்றிலும் சமாதானத்தையே கொண்டதுஎன வற்புறுத்திஞர். சரித்திரச்சிறப்புவாய்ந்த வாக்குத்தத்தின் மக்களிடையே தாம் வந்திருப்பதைக் குறிப்பிட்டு அவர்கள்பால் எப்போதும் தம்நல்லெண்ணம் இருக்கும் எனத் தெரிவித்தார். சமாதானம், சமாதானம் என ஹீப்ரு வார்த்தைகளில்கூறி தமது பேச்சை முடித்தார்.

பின்னர் நசரேத்தை நோக்கி அவரது ஊர்வலம் சென்றது. பாதையின் இருமருங்கிலும் ஆயிரக் கணக்கான மக்கள் பல மணிநேரமாகக் காத்திருந்தனர். நசரேத்துக்குச் செல்லும் ஒடுங்கிய வீதியில் ஏராளமான கத்தோலிக்கர்களும் குருக்கள், கன்னியர்களும் நின்றனர். இவ்வீதி முன்தனத்தில் "ஆறுவது சின்னப்பபாப்புவீதி"என புதிதாக நாமகரணம செய்யப்பட்டிருந்தது.

## பலத்த பாதுகாவல்

பாப்பரசருடன் ஏராளமான காவல் வீரர்களும் சென்றனர். சிவில் உடையில் பலஇரகசியப் பொலீசார் பாப்புவின் முன்னும் பின்னும் சென்றனர். திவ்விய பூசையின்போதும், மற்றும் வைபவங்களின்போதும் மாறி மாறி இரு இரகசியப்பொலீசார் பாப்புவின் பக்கத்தில்நின்று கண்ணிமை கொட்டாது காவல் செய்தனர்.

## உறவினரைக் கண்டனர்

பேர்லின் மதிற்சுவர் எங்ஙனம் ஜெர்மானிய மக்களை இருகூருகப் பிரித்து அவர்களின் சகோதரத்துவ உணர்ச்சிகளை வேற்றுமைப் படுத்துகிறதோ அதுபோலவே ஜோர்தானிய இஸ்ரவேல் எல்லையும கடந்த 15 வருடங்களாக யூத முஸ்லீம் மக்களையும் இருகூருக்கிவிட்டது. இனசனர், உறவினர் நண்பர்களாகப் பிரிந்திருந்தோர் அனைவரும் அன்றுதினம் பாப்புவின் வரவால் அகமகிழ்ந்தனர். தடைகள் அனைத்தும் தளர்த்தப்பட்டமையால் எல்லைக்கு வந்து பாப்புவைத் தரிசித்ததுடன் தம் பழையகால நண்பர்கள், உறவினர்கள், குடும்பத்தினரையும்கண்டு மகிழ்ந்தனர். ஆவல் மிகுதியால் பிரிந்திருந்தோர் எல்லையைச் சமீபித்து உறவாடமுற்பட்டபோது ஜோர்தானிய பொலீசார் ஒருபுறமும் இஸ்ருயேல் காவலர்கள் மறுபுறமும் அவர்களைத்தடுத்து நின்றனர்.

## ஜெருசலேமில்

நசரேத்தில் திவ்வியபூசையை முடித்தபின்னர் பாப்பரசரின் ஊர்வலம் ஜெருசலேமுக்குச் சென்றது. ஜெருசலேம் முழுவதும் இஸ்ருயேல் அரசாங்கத்தின் நீலவெள்ளைக் கொடிகளாலும் பாப்புவின் வெள்ளை மஞ்சள் கொடிகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

பாப்பு செல்லும் வீதியெங்கும் பிரகாசமான மின்விளக்குகள் மாலைவேளையைப்பகலாக்கிக் கொண்டிருந்தன. பாதையின் பக்கங்களில் மக்கள் திரளாக நின்றனர். மக்கள் மகிழ்ச்சியால் ஒழுங்குதப்பாதிருக்க வீதியினூடே இருமரவேலிகள் போடப் பட்டிருந்தன,

ஜெருசலேம் நகர மேயர் பாப்புவை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். உப்பும், அப்பமும் சேர்ந்த பொதியொன்றைப் பாப்புவின் கரங்களில் வைத்து யூதசம்பிரதாயப்படி மேயர் வரவேற்றபோது பலத்தஆரவாரம் எழுந்தது. ஆலயமணிகள் அனைத்தும் அத்தருணத்தில் இடைவிடாது ஒலித்தன.

பாப்புவை வரவேற்கவும் கண்டுகளிக்கவும் வழியெல்லாம் மக்கள் திரண்டிருந்தனர். ஆகவே மோட்டார் ஊர்வலம் பாப்புவின் விருப்பத்துக்கிணங்க குறைந்த வேகத்தில் சென்றது. எனவே ஊர்வலம் ஜெருசலேமைச் சேர்ந்தபோது பொழுது சாய்ந்துவிட்டது.

பலமணிநேரமாக காத்திருந்தபோதும் மக்கள் கூட்டமும் மேயரும் மற்றைய பிரமுகர்களும் பொறுமையை இழக்காது காத்துநின்றனர்.

## இராப்போசன மண்டபத்தில்

சீயோன் குன்றுகளில் பாப்பு ஏறிச்சென்றார். இராப்போசன மேல்மாடிக்கும் அவர் நடந்து சென்றார். இராப்போசனமண்டபத்துக்கு கர்திஞல்கள் திருச்சங்கதலைவர் கர்திஞல் இயூஜின் திசரென்ட் ஆண்டகையும் உடன் சென்றார். அங்கு பாப்பு அமைதியாகப் பிரார்த்தனை செய்தார்.

பின்னர் தேவதாயின் புனித தலமான டோர்மிற்றன் தேவாலயத்துக்குப் பாப்பு சென்றார். ஆசீர்வாதப்ப சபைத்தலைவர் பாப்புவை லத்தீனிய மொழியில் வரவேற்றார். இங்குதான் தேவதாயின் மரணம் நடைபெற்றது. இங்குள்ள தேவதாயின் கல்லறையண்டை பாப்பு சென்று முழந்தாளிட்டுப் பிரார்த்தித்தார்.

இருதினங்களாக இடைவிடாத பிரயாண நிகழ்ச்சிகளால் களைத்திருந்தபோதும் பாப்பரசர் டோர்மிற்றன் தேவாலயத்தில் கூடியிருந்தோரிடையே உரை நிகழ்த்திஞர்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## பாப்பரசரின் முதல் நிருபம்

ஆறுவது சின்னப்ப தந்தை திருச்சபையின் தலைவராக பதவியேற்ற பின்பு தம் திருச்சபைக்கும், உலகுக்கும் அளிக்கும் உத்தியோகபூர்வமான முதலாவது நிருபம் விரைவில் வெளியிடப்படுமென வத்திக்கான் அதிகாரிகள் கருதுகின்றனர்.

கடந்த சில்வாரங்களாக தமது முதலாவது நிருபத்தை உருவாக்கும் முயற்சியில் பாப்பரசர் ஈடுபட்டிருந்தாரென்றும் பலஸ்தீன யாத்திரையிஞல் அம்முயற்சி தாமதிக்கப்பட்டதெனவும் கூறப்படுகிறது.

தம் புனிதயாத்திரையின் பல அம்சங்களை நிருபத்தில் புகுத்துவாரெனவும் அவ்வதிகாரிகள் கருதுகின்றனர். உயிர்த்தஞாயிறுக்கு முன்னதாக பாப்பரசரின் முதலாவது நிருபம் வெளியிடப்படலாம்.

## புதிய கருதிஞல்மார் ?

பரிசுத்த தந்தை பலஸ்தீன திருயாத்திரை முடித்து ரோமாபுரி திரும்பியபின் சில புதிய கருதிஞல்மாரைநியமிப்பாரென்றுஎதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதுள்ள கருதிஞல்மார் தொகை 80. இத்தொகையை 90 ஆகப் பாப்பரசர் கூட்டுவாரன்று வத்திக்கான் வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

பல வருடங்களாக கருதிஞல்மார் தொகை 70 ஆகவே இருந்தது. ஆஞல் காலஞ்சென்ற 23-ம் அருளப்பர் அத்தொகையை 87 ஆகக் கூட்டிவைத்தார்.

புதிதாக நியமிக்கப்படவிருக்கும் கருதிஞல்மாருள் இங்கிலாந்தின் ஹீனன் அதிமேற்றிராணியாரும், அ[illegible]கொன்வே அதிமேற்றிராணியாரும், 6-ம் சின்னப்பர் பாப்பரசராகத் தெரியப்பட்ட பின் அவருக்குப்பதிலாக மிலான் அதிமேற்றிராணியாராக நியமனம் பெற்ற கொலம்போ ஆண்டகையும் ஓரளவுக்கு நிச்சயமாக நியமிக்கப் படுவார்களென்று ரோமாபுரியிலே நம்பப்படுகிறது.

## 250 முறை இரக்கம்

அமெரிக்காவிலேயுள்ள இரக்கத்தின் சகோதரிகளென்று அழைக்கப்படும் கன்னிகாஸ்திரிகளில் 250பேர் பார்வையில்லாதவர்களுக்குப் பார்வையளிக்கும் நோக்கமாக தங்கள் இறப்பின் பின் தங்கள் கண்களை உபயோகிக்கும்படி சாதனம் எழுதிக்கொடுத்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையை வழிப்படுத்திய மரக்கை

தமது மரக்கையைச் சுவாமியார் காட்டியதே அதுவரை குதூகலித்து ஆர்ப்பரித்த அப்பெண்மணிகள் அதனைக்கூர்ந்து பார்த்துவிட்டு அந்தப்படியே மலைத்துப்போய்த் தலைகவிழ்ந்து, மரச்சிலைகளாய்ச் சமைந்து, அசைவற்று மௌனமாய் நின்றார்கள். அவர்களின் உள்ளங்களில்பிறந்த பரிதாப உணர்ச்சியை அவர்களுடைய வதனம் பளிங்குபோல எடுத்துக்காட்டியது.

அப்போது சுவாமியார் இரக்கமான ஒருகனிந்த பார்வையிலே அவர்களை விழித்து, இந்த எனதுகரத்தை எவ்விதம் நான் இழந்தேன் என்பதைக் கேட்டறிந்துகொள்ள ஒருவேளை நீங்கள் ஆத்திரப்படுவீர்களாக்கும் என்று சொல்லிவிட்டுத் தமதுமரக்கையை அது முன்னிருந்ததுபோல் இருக்க விடுமாறு உள்ளேஇழுத்தபோது, அவர் தமது மார்பிலே இருதயத்திற்குச் சமீபமாக அணிந்திருந்த "லீஜன் அவ் ஓனர்" எனப்படும் பிராஞ்சிய மகிமைவிருதாகிய அழகிய தங்கப் பதக்கம்ஒன்று மின்சாரஒளியில் பளீரிட்டொளிரவே, அதனைக்கண்ணுற்ற அம்மங்கையர்கள் ஆச்சரியவசத்தராய்ப் பேசநாவெழாது கண்களை அகலவிரித்து ஒருவரையொருவர் பிரமிப்புடன் நோக்கினார்கள். கல்லறை போன்று சிறிதுவேளை அமைதி நிலவியது. பின்னர் சுவாமியார் தம்மை அறியாமலே ஒரு நெடுமூச்செறிந்துவிட்டுப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்:

"நான் ஓர்இளங்குருவாக இருந்த பொழுது அதிகபலமும், திடமும் வாய்ந்த இருபுசங்களையும், கரங்களையும் கொண்டிருந்து, லோகப்பொருள்களை உருக்கிப் பலவித உபகரணங்களையும் உருவாக்கும் வார்ப்புத்தொழிற்சாலை ஒன்றிலே கஷ்டப்பட்டுழைத்து,உழைத்தபணத்திலே எனது செலவுபோக மீதியைத் தருமத்தில் செலவிட்டேன். எனது இருகரங்களாலும் நோயாளரைப் பராமரித்தேன். ஒருமுறை தொழு (குஷ்ட)நோயாளி ஒருவரைத் தூக்கியெடுத்து அரைமைல்தூரம் சுமந்துசென்று தொழுநோயாளர்சாலை கொண்டுபோய்ச் சேர்த்தேன். வயதுசென்ற கிழவிகள் தங்கள் பாரமான மரச்சுமைகளைச் சுமந்துசெல்லப் பலமுறைகளிலும் அவர்களுக்கு எப்படியெல்லாம் உதவி செய்தேன் என்பது இப்பொழுதும் என்நினைவில் இருக்கிறது. ..."

அதன்மேல் சுவாமியார் சிறிதுவேளை தயங்கி நின்றுவிட்டுப் பின்னரும் தொடர்ந்து சொல்லுவார். "யுத்த காலத்திலே பிரான்சில் ஆடவர்கள் மிகஅருந்தலாயிருந்தபோது எனது விசாரணைப்பங்கைத்துறந்து பிறந்த பொன்னாடாகிய எனதுபிரான்ஸ்தேசத்திற்காகப் போராடுமாறு வீரத்துவமாகப் போர்க்களம்சென்றேன். யுத்தம் நடந்துகொண்டிருந்த இடத்தின் மத்தியில் நாங்கள் நின்றோம். போர்முகத்திலே பகைவர்கரம் மேலோங்கியது. பிரான்சின் வடபகுதி முழுவதும் ஜேர்மன் தாங்கிகள் மேகமுழக்கம்போன்று இரைந்தவண்ணம் விரைந்து முன்னேறிக்கொண்டிருந்தன. நாங்கள் உயிரையே பாராது இறந்தபோராடினோம். அவைகளின் முன்னேற்றத்தைத் தடுத்துநிறுத்தித் தாமதப்படுத்தினோம். இதுநிகழ்ந்தது சீன்நதிக்குமேல் என்பது இன்னும் என்ஞாபகத்தில் இருக்கின்றது. அது தான் எங்கள் கடைசியான அரண். அதிலே வழிவிட்டுக்கொடுத்துப் புறங்காட்டினோமானால் ஜேர்மனியர்கள் கணநேரத்திலே பரீஸ்நகரில் நிற்பார்கள் என்பதை நாங்கள் அறிவோம்."

இவ்வாறு சொல்லிமுடித்ததும் அவரது கண்கள்இரண்டும் கலங்கின. பேசநாவெழாது சற்றுவேளை தாமதமாகநின்று திரும்பவும் தொடர்ந்து சொல்லுவார்: "அப்பொழுது எம்பக்கமாக ஒரு சாள்சன்மேஜர் நின்றார். அவருக்கு மனைவியையும், இருபுதல்வரும், இருபுதல்வியருமாக நான்கு பிள்ளைகள்கொண்ட ஒருகுடும்பம் இருந்தது. லூசி, மேரி, தோமஸ், அந்தோனிஎன்பனவே பிள்ளைகளின் நாமங்கள். அவர் போர்முனையிலே அதிகம் கடுமையான காயமடைந்தார். சோர்ந்துபோய் நிலத்தில் வீழ்ந்தார். அவருக்குஉதவியாக நான் ஓடிப்போனேன். அவரை மெதுவாகத்தூக்கி எனது தோள்களில்வைத்துச் சுமந்து சென்றபோது, ஐயோ! என்ன துரதிர்ஷ்டம், எனக்குச் சமீபமாக ஒரு குண்டு வெடித்து என்னுடையபுயத்தைத் துண்டித்துவிட்டது. என்றாலும் நான்மனம்பேதலியாது அவரைச் சமமான ஓர் இடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தேன். அங்கே செஞ்சிலுவைச் சங்கம் இருவரையும் பொறுப்பேற்றுக் காயங்களைக்கட்டிப் பராமரித்து வரலாயிற்று. இவ்விதம் எனது உயிரைப்போல் மதித்துச் சேவைசெய்து, நேசித்திருந்த தேசத்தொண்டாலும், எனதுஉடல்பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்துச் சேவைசெய்து நேசித்திருந்த கிறிஸ்துநாதர் கற்பித்த பிறர்சிநேகத் தொண்டாலும் போரிலே எனது அருமையான கரத்தைஇழந்தேன்" என்று மழை பொழிந்துகொண்டிருக்கும் கார்மேகத்திலே மின்னல் தோன்றுவதுபோலக் கண்ணீர் வழிந்தோடிய தம்முடைய வதனத்தில் இலேசாக ஒரு புன்முறுவல்தோன்றச் சுவாமியார் கூறிய சோகக்கதை ஒருமுடிவுக்கு வந்தபோது கல் நெஞ்சுமே கசிந்து கரையும்படியான அந்தச் சோகவரலாற்றை அங்கலாய்ப்புடன்கேட்டிருந்த நங்கையர்களுள் அநேகரது கண்களிலிருந்து துளிதுளியாகக் கண்ணீர் பெருகி இருகன்னங்களாலும் வழிந்து கொண்டிருந்தது.

அங்ஙனமாக, சுவாமியார்சொல்லிய இந்தச் சோகசம்பவத்தைக் கேட்டிருந்த பெண்மணிகளுள் ஓர் இளம் பெண்ணின் இதயத்திலே மிகஆழமாக அது ஊடுருவிச்சென்று அவள் உள்ளத்தை அதிகம் உறுத்தவே, அவள்மனதில் பெரும்போராட்டம் ஒன்று நிகழ்வதுபோலும், அவள் நெஞ்சில் நீங்காத ஒருசுமை ஏறியதுபோலும் காணப்பட்டது. அப்போது அவள்உடல்மட்டும் அங்கிருக்க, அவளின் சிந்தனைப்பறவையோ சிறகடித்து எங்கேயோ பறந்துகொண்டிருந்தது. அவளுடைய அகத்திலுண்டான அங்கலாய்ப்பையும், ஆழ்ந்தவேதனையையும் அவளின்முகம் பிரதிபலித்துக் காட்டியது. ஆற்றாது அவள்மனம் வெதும்பியது. உளம் பதைபதைத்து அவளைத் துடியாய்த் துடிக்கச்செய்தது. அதன்விளைவாக அவர்கள்மத்தியிலே அமைதியைக்கலைத்துக்கொண்டு திடீரெனவெழுந்த அவளின் பெரும் அலறல், இல்லை, அழுகுரல் எல்லோருக்கும் பெரும்அதிர்ச்சியை உண்டுபண்ணியது. மின்னாமல் முழங்காமல் இடியிடித்துமழைபொழிவதுபோன்று அவள் காத்திராப்பிரகாரம் விம்மல் பொருமலுடன் ஆறாய்க் கண்ணீர் சிந்தி அழுதுநின்ற அந்தச் சோக காட்சியானது அனைவரையுமே கலங்கவைத்தது. ஆயினும், வார்த்தைகளோ அவள் வாயிலிருந்து வரமறுத்தன. என்றாலும் அவள்மனதில் குமுறிக் கொண்டிருந்த எண்ண அலைகள் வேதனைசூழ்ந்த அவளது உள்ளத்திலிருந்து சொற்களாக வெடித்துக் கொண்டு வெளிவந்தபோது அவள் தன்னுடைய உணர்ச்சிவேகத்தை ஒருவாறு கட்டுப்படுத்திக்கொண்டு ஒரு நெடுமூச்செறிந்து பெருவாய்பெருஞ் சத்தமாய், "ஐயோ, என் தந்தைக்கு உயிர்ப்பிச்சைஅளித்த பீற்றர் லோஞ்சினஸ் சுவாமி நீங்கள் தானோ?" வென்று கதறிக்கொண்டு அடியற்ற மரம்போலத் தவக்கோலம் தாங்கி நின்ற அவர் காலடிகளில் வீழ்ந்தாள். அவர் பாதங்கள்இரண்டையும் தனது இருகரங்களாலும் தாவிக் கட்டித் தழுவி முத்தமிட்டுத் தன்னுடைய கண்ணீரால் அவைகளை நனைத்தாள். இதைக்கண்ணுற்றதே சுவாமியாருக்குப் பகீரென்றிருந்தது. எதிர்பாராத இந்தத்துயரகாட்சியானது அவளுடன் கூடவிருந்த ஏனைய மங்கையர்களையெல்லாம் கண்கலங்கச்செய்து சஞ்சலத்தில் ஆழ்த்தியது.

(வளரும்)

குவின்னி விக்ரோறியா வஸ்தியாம்பிள்ளையின்

## மரண அறிக்கை

பிறப்பு: 8-7-21. இறப்பு: 9-1-64.

நித்திய பிதாவே! உமது திருக்குமாரனின் விலைமதியாத திருஇரத்தத்தைப் பார்த்து உத்தரிக்கிற ஆத்துமாக்கள் பேரில் இரக்கமாயிரும் சுவாமி.

எங்களை விட்டுப்பிரிந்தும் எங்கள் ஞாபகத்தைவிட்டு என்றும் பிரியாத எங்கள் அருமை மகளும், சகோதரியுமாகிய குவின்னி விக்ரோறியா வஸ்தியாம்பிள்ளைக்கு "நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும் சுவாமி. முடிவில்லாத பிரகாசம் இவவுக்குப் பிரகாசிக்கக்கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக, ஆமென்.

இவவின் பிரிவால் துயருறும் தாய்: இராசம்மா வஸ்தியாம்பிள்ளை, சகோதரர், சகோதரிகள்: வில்வம், பேள் (சரஸ்), விசயம், டக்டர் வஸ்தியாம்பிள்ளை (வீரசிங்கம்), செல்லத்துரை, ரோஸ் (மணி), சேச்சில், ஈடன்.

மைத்துனர்கள்: சருவானந்தம், பேனி, யோசேப்பின் மனோன்மணி, ராணி.

பெரியதகப்பன்: வண. பிதா B. A. தோமாஸ் O. M. I, B. ஞானப்பிள்ளை

சிறியதகப்பன்: அப்பாக்குட்டி மனுவல்பிள்ளை, J. E. செபஸ்தியாம்பிள்ளை.

பெரியம்மா: அன்னம்மா

மாமி: மரியம்மா அகஸ்தின்.

8, விதானையார் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கைவிடப்பட்டோரின் பரிபாலகரான அர்ச். யூதாததேயு, கோடி அற்புதரான அர்ச். அந்தோனியார், அர்ச். சூசையப்பர், நம்பிக்கை அற்றவரினதும், அவசரத்திலிருப்பவரினதும், பரிபாலினி அர்ச். றீத்தம்மாள், இவர்கள் மூலம் சற்பிரசாதநாதரிடம் கேட்டமன்றாட்டு அனுகூலமானதற்கு நன்றியறிதலாக இதைப் பிரசுரிக்கின்றேன்.

நீர்கொழும்பு. ஒரு பக்தர்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கிறீஸ்துராசாவுடைய திரு அருளினாலும், சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், இவர்களது மன்றாட்டினாலும் நாங்கள் கேட்டவரம் கிடைக்கப்பெற்றோம். பிரசுரிக்கத் தாமதித்ததற்கு மன்னிப்புக்கோரி நன்றியறிதலாக இதைப் பிரசுரிக்கிறேன். இன்னும் நாங்கள் கேட்கும் இரண்டு வரங்களையும் பெற்றுத் தரும்படி மன்றாடுகிறோம்.

உமது அடியாள்.

செல்வி லோறேஞ்சியாப்பிள்ளை (கமலம்) அமிர்தநாதர் அவர்கள்

## அமரபதமடைந்த 8-ம்வருட ஞாபகம்

பிறப்பு: 28-4-30. இறப்பு: 19-1-56.

இரக்கமுடையவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே இரக்கமடைவார்கள்.

சீவியத்தில் நேசித்தவர்களை மரணத்திலும் மறவாதீர்கள்.

ஊனக் கண்ணில் மறைந்தாலும் எம் ஞானக் கண்ணில் என்றும் மறையாத, எங்கள் அருமை மகளும் ஆருயிர்ச்சகோதரியுமான, செல்வி லோறேஞ்சியாப்பிள்ளை (கமலம்) அமிர்தநாதர் பரலோக பிராப்தியான, 8-ம்வருடம் 19-1-64-ல் பூர்த்தியாகின்றமையால் 20-1-64-ல் கொத்தலயிலும், (கொழும்பு), யாழ்ப்பாண ஆசனக் கோவிலிலும் இவவின் ஆன்மசாந்திக்காக, திவ்வியபூசைப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுற்றோர் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவுடன் கோருகின்றோம்.

இவவின் பிரிவால் துயருறும்:

தந்தை: ரி. கே. அமிர்தநாதர்
தாய்: பொன்றோஸ் அமிர்தநாதர்.
சகோதரிகள்: திருமதி யேசுதாசன் (சவுந்தரி)
செல்வி றீற்று அமிர்தநாதர்.
செல்வி திரேஸ் அரியமலர் அமிர்தநாதர்.
சகோதரர்கள்: திரு. அன்ரன் குணசேகரம்.
செல்வன் ஜெயசேகரம், சேவியர்.

340, கொத்தலை,
வத்தளை.

### நேர்த்தியின் பூர்த்தி

என்னைப் பீடித்து வருத்திவந்த வியாதியை நீக்கிச் சுகந்தரும்படி பஞ்சம், படை, கொள்ளை, பெருவாரி நோய்களை நீக்கவல்ல பரிசுத்த செபஸ்தியார் முனியோரின் திருவுருவப்படத்தைப் படுக்கையின் அருகில்வைத்துப் பக்தியோடு மன்றாடி வந்தேன்.

கேட்டுக்கொண்டபடியே எனக்குச் சுகம் கிடைத்தது. அவரின் நாமம் எங்கும் என்றென்றும் புகழப்படுவதாக நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

அளம்பில் சி. றோசம்மா
3-1-64.

### நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். ஆரோக்கியநாதரின் அருளால் நான் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப் பெற்றுள்ளது. அவர் நாமம் புகழப்படுவதாக.

Mrs. அ. அந்தோனிப்பிள்ளை

## செப அப்போஸ்தல சபை

பொதுக்கருத்து:

மீண்டும் ஒன்றுசேரக் கிறிஸ்தவர்கள்யாவரும் செபித்துஉழைப்பதற்காக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து:

பரிசுத்த சுவிசேஷம் ஆசியநாடுகளில் ஒரு தடையுமின்றிப் பிரசங்கிக்கப் படுவதற்காக மன்றாடிக் கொள்வது.

மௌனமே மங்கையருக்கு மேன்மையான மணி ஆரம். ஆனால், அணிந்தால் அல்லவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னையே நீ திரும்பிப்பார்!

— செல்வம் —

அன்று எங்கும் ஒரே சப்தம். எங்கும் ஒரே கலவரம். ஆம், அன்று புத்தாண்டு பிறந்த புனிதநாள். உலக சரித்திரத்திலே, இருபதாம் நூற்றுண்டிலே புதிய வருடமொன்று உதயமாகியது. உற்றூர் உறவினர் ஒருவருக்கொருவர் புதுவருட வாழ்த்துக்கள் வழங்கினர். நன்மை நாடும் நல்லோர் எல்லோர்க்கும் நல்வாழ்த்து நல்கினர். புத்தாண்டு புதுமை கொண்டுவருமென ஜோதிடம் கூறினர். இவ்வாண்டு வாழ்க்கையில் மறுமலர்ச்சி கொண்டுவருமென மலர்ச்சியுடன் மனமார வாழ்த்தினர்.

இன்றோ... ஆண்டு முடிந்தது. ஆவி பறந்தது. ஆண்டாண்டு அழுது புரண்டாலும் மாண்டாண்டு வருமோ? இவ்வாண்டில் நடந்தேறிய நன்மை தின்மைகளைச் சரித்திரத்தின்வாயிலாக அறியமுடியுமேயன்றி அனுபவத்தில் காணமுடியாது.

எம் எதிராண்டு மலரவேண்டுமாயின், மறுமலர்ச்சி கொள்ளவேண்டுமாயின் கடந்த ஆண்டைப் பின்நோக்கிப் பார்ப்பது அவசியமல்லவா? தின்மைகளைத்தீட்டி நன்மைகளை நாடக்கடந்த ஆண்டு புத்தாண்டிற்குப் புதுவழி கோலுமல்லவா? அனுபவம் அறிவின் ஊன்றுகோல். ஆகவே, மறு ஆண்டின் உதயத்தில் நல்கும் நல்லுரைகள் நடைமுறையிலும் செயற்பட இன்று கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் நல்கிய நல்லுரைகளும், வாழ்த்துரைகளும் எவ்வளவிற்கு நம் வாழ்வில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதென்பதை ஆராய்வது ஒரு நல்ல கருவியாகும் என்பதில் ஐயமில்லை.

இதை உணர்ந்த உத்தமர்கள் உள்ளத்தில் இந்நாட்களில் சில கேள்விக் குறிகள் உதயமாகின்றன. ஜோதிடர் ஜோதிடம் கூறியதுபோல் இவ்வாண்டு வாழ்க்கையில் புதுமைகள் கொண்டு வந்ததா? வாழ்க்கையில் மறுமலர்ச்சியை மலரவைத்ததா? அன்று மனமார வாழ்த்திய வாழ்த்துக்களெல்லாம் இன்று மலர்ந்து விரிகிறதா அல்லது மங்கிய ஒளியுடன் மறைகிறதா?

ஆயிரத்தித் தொளாயிரத்து அறுபத்திமூன்றும் ஆண்டே! அன்று புன்னகையுடன் மலரும் மல்லிகை போல் மலர்ந்தாயே. இளம் மங்கையைப்போல் இளமையுடனும் புதுமையுடனும் விளங்கினுயே. ஆயின், இன்று மலர்ந்து வண்டுகளுக்கு இரையாகி வாடிவிழும் மலர்போல் விழுகிறுயே. வாழ்க்கையின் இன்பத்தை நுகர்ந்து தலைநரைக்கத் தள்ளாடும் கிழவிபோல் கிழண்டிவிட்டாயே. இக் கிழட்டுவயதிலே உன் வாழ்க்கையைத் திரும்பிப்பார்ப்பது நல்லதல்லவா?

திடமுள்ள தீரர்களே! திரும்பிப் பாருங்கள் திடுக்கிடச்செய்த சம்பவங்களை. 1963-ம் ஆண்டே நில்! போதும் உன் திருவிளையாடல்கள். முன்னூற்று அறுபத்தைந்து நாட்களாக நீ கொண்டுவந்த நன்மைகளையும், தின்மைகளையும் திரும்பிப்பார்! லண்டன் மாநகரத்தில் நடைபெற்று வந்த மனிதத்தன்மையற்ற செயல்களுக்கு முழுக்குப் போட்டதைத் திரும்பிப்பார்! விஞ்ஞான வளர்ச்சியால் வித்தைகள் காட்டி மனித அறிவுச் சக்தியை மேம்படச்செய்த வருடமல்லவா? ஒற்றுமைக்காகப் பாடுபட்ட திடந்தோள் படைத்த தீரர்களுக்கு வாய்க்காலாக அமைந்த பொன்னான வருடமல்லவா நீ?

ஆம், சகல கிறீஸ்தவர்களை மட்டுமல்ல சகல மக்களையுமே ஒன்று சேர்க்க முன்வந்த ஒற்றுமையின் தந்தையாகிய பாப்பாசர் அருளப்பரை அழைத்துச் சென்றதும் நீயே. மானிடவர்க்கமே மாரடித்துக்கதற அம்மாணிக்கத்தை மறைத்துவிட்டதும் நீயே. அத்துடன் நின்றதா உன்நிர்ப்பந்தம்? இல்லை, இல்லவே இல்லை. சாதி, மத, பேத வேற்றுமை பாராது, நிறஉரிமை கொண்டாடவிடாது, ஒற்றுமைக்காக ஒத்துழைத்த அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோண் கெனடியைத் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கின கொடிய வருடமும் நீயே. போதும்... போதும்! மேலும் திரும்பிப்பார்க்க வேண்டாம் உன்மாய லீலைகளை.

நடந்தேறிய சம்பவங்களோ எழுத்திலடங்கா. உலகத்தையே உலுப்பிவைத்த உண்மையான நன்மைகள் சில. மானிடவர்க்கத்தை மாரடிக்க வைத்த மனவருத்தத்திற்குரிய சம்பவங்கள், வேறுசில. திக்கெட்டும் திடுக்கிடச்செய்த திடீர்ச்சம்பவங்கள் ஏனையவை. இவ்வுண்மைகள் உலகத்தைப் பொதுப்படத் தாக்கியன. இத்தால் இவ்வாண்டு உலகசரித்திரத்தில் பொன்னாலும், பொதியாலும் பொதிக்கப்படும். இவ் அனுபவ அறிவு மறுஆண்டின் உலக மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உதவுமெனில் மிகையகாது. ஆனால், எமது வாழ்வு வளம்பெற என் செய்வோம்? எவ்வித அனுபவ அறிவு வேண்டும்? நமது சொந்த வாழ்க்கையின் அனுபவ அறிவல்லவா? இவ்வறிவை எழுத்தாளன் எழுத்தில் காட்ட முடியாது. நமது வாழ்க்கையை நாமே திரும்பிப்பார்க்க வேண்டும். நமது உள்ளத்தை ஊடுருவிப் பார்க்க வேண்டும். சிந்தையைச் சிதறிப்பார்க்க வேண்டும். இதற்கு அமைதியான சூழ்நிலையும் திடம்படைத்த மனமும், நேர்மையான நெஞ்சம் வேண்டும்.

சிந்தித்துப் பாருங்கள் சிந்தையுள்ள சீமான்களே! திரும்பிப் பாருங்கள் திடமுள்ள தீரர்களே! கடந்தாண்டு வாழ்க்கையில் ஏற்பட்ட நன்மை தின்மைகளைத் திரும்பிப்பாருங்கள்! அன்புடன் அழித்த உதவிகளையும், எரிச்சலால் எரித்த இதயங்களையும் திரும்பிப்பாருங்கள்! பொதுநலம் விரும்பி நாட்டுக்கும், அயலார்க்கும் ஆற்றிய நன்மைகளையும், சுயநலம் நாடிச் சுட்டெரித்த சுற்றத்தாரையும் திரும்பிப்பாருங்கள்! கடமையுணர்ந்து கடனாற்றிய கபடமற்ற இதயங்களையும், பொறுப்பற்ற வாழ்வால் பொசுக்கிய பொதுநன்மையையும் திரும்பிப் பாருங்கள்!!

நன்மைசெய்யத் தருணம் கிடைத்த போதெல்லாம் நன்மை செய்தீர்களா அல்லது அவற்றை உதறித்தள்ளி உள்ளமற்ற மிருகத்தன்மை படைத்தீர்களா? மானிடப்பொது வாழ்வும், சொந்த வாழ்வும் முன்னேற முயற்சித்தீர்களா? அல்லது தன்னலம் தலைதூக்க தயவற்ற வாழ்வை நாடினீர்களா? வாழ்க்கையைப் பின்நோக்கிப் பார்க்கும் முற்போக்குவாதிகளே! உள்ளத்தை ஆழக்கிண்டி வாழ்வின் ஆழத்தைப் பாருங்கள். மனம்போன போக்கில் வாழ்க்கைத் தேரை ஓட்டினீர்களா? அல்லது இயற்கையின் சட்டங்களுக்கும், மனித அறநிலைக்கும், நீதிமுறைக்கும் அடிபணிந்து அடங்கி வாழ்ந்தீர்களா? மனித உரிமையையும், மனிதத் தன்மையையும் மிதிக்கவந்த மனிதத்தன்மையற்ற மிருகங்களை மிரட்டினீர்களா? அல்லது 'ஆமா' பாடும் கோழைகளாகினீர்களா?

நாம் ஞானத்தில் ஸ்நானம் செய்திருப்பின், கிறீஸ்துவில் கிறீஸ்தவனுக்கப்பட்டிருப்பின் இதற்கப்பாலும் போகவேண்டும். [illegible]

கிறீஸ்தவர்கள்? ஞாயிற்றுக்கிழமை திவ்விய பலியில் பங்குபற்றி அத்துடன் நின்றுவிடும் நிலையற்ற கிறீஸ்தவர்களா? அல்லது அன்பு எங்கும் ஆழப்பதிய அன்புக்கிரிகைகள் செய்யும் உண்மைக் கிறீஸ்தவர்களா? கடவுளின் கற்பனைகளுக்கும், வேதப்பிரமாணங்களுக்கும் அச்சத்தால் அடிபணிந்து வாழும் அடிமைகளா? அல்லது அன்பு மேலோங்க அத்தால் விடுவிக்கப்பட்ட சுதந்திரக் கிறீஸ்தவர்களா? சுருங்கக் கூறின் பழயவேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டதா? அல்லது நம் வாழ்வு சென்ற ஆண்டை விட நன்கே வளர்ந்து தளிர்விட்டுப் பூத்துக் காய்த்துப் பழுத்துத் தூங்கும் பழங்களைக் கொண்ட பழமரமாகியதா?

இக் கேள்விகளை நாமே நம்மைக் கேட்போம். நம்மைக் கீழ்நோக்கும் பிற்போக்கு வாதிகளாகவல்ல ஆனால், நாளை நம் வாழ்வு மலர, மறுமலர்ச்சி கொள்ள விரும்பும் முற்போக்குவாதிகளாக விடையளிப்போம். ஆதம பாவனைகொண்ட அர்த்தமற்ற மானிடர்களாகவல்ல ஆனால், உத்தமபாவனை பூண்ட உத்தமர்களாக விடையளிப்போம். "...அவர்களுடைய கனிகளைக் கொண்டே அவர்களை அறிவீர்கள்... நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (மத். 7:12-20) என்னும் வார்த்தைகள் எம்முன் எப்பொழுதும் தாண்டவமாடட்டும். "தூயஇருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள்..." (மத். 5-8) என்ற புனிதவார்த்தைகள் எம் அறிவை விட்டு என்றும் அகலாதிருக்கட்டும்.

இவ் வருடத்தில் நம்வாழ்வு மலர, மறுமலர்ச்சிகொள்ள சென்றவருட அனுபவ அறிவு நமக்கு வாய்க்காலாக அமைக!

எல்லோர்க்கும் யேசுவின் பேரில் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக!

# கைவிடப்பட்டோரின் பாதுகாவலர் அல்லது அர்ச். யூதா ததேயு அப்போஸ்தலர்

## இவருடைய சரித்திரம்

நமதாண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதர் தாம ஸ்தாபித்த திருச்சபையைப் போதிக்கப் பன்னிரு அப்போஸ்தலரைத் தெரிந்தெடுத்தார். அவர்களுள் எங்கள் ஆண்டவரின் ஒன்றைவிட்ட சகோதரனுகிய **அர்ச். யூதா ததேயுவும்** ஒருவராவர்.

அர்ச். யூதாததேயு அல்பேயுவின் குமாரருள் ஒருவராயிருந்தார். அல்பேயுவுக்குக் **கிளேயோப்பாஸ்** என்று இன்னெரு நாமமும் உண்டு. கிளேயோப்பாஸ் யேசுவின் வைத்தாதையாகிய அர்ச். சூசையப்பருடைய சொந்தச் சகோதரனுயிருந்தார். அர்ச். ததேயுவின் தாயாரின் நாமம் **மேரி கிளேயோப்பாஸ்.** மேரி கிளேயோப்பாஸ் தேவதாயாருக்கு மிகவும் நெருங்கிய உறவினளாயிருந்தாள். "பத்தியுள்ள ஸ்திரீகள்" என்று சுவிசேஷத்திலே குறிக்கப்பட்டிருக்கும் பரிசுத்த கூட்டத்தில் அவரும் ஒருவராய் இருந்தார். கல்வாரியிலே திருமீட்பரினது சிலுவையடியிலே வியாகுலங்தேங்க நின்று புலம்பிக்கொண்டு நின்ற ஸ்திரிகளுள் அவரும் ஒருவராவர். ஆகவே தேவதாயாரினதும் சூசையப்பரினதும் இரண்டு குடும்ப வழியினாலும் அர்ச். யூதா எங்கள் இரட்சகருக்கு மிகவும் கிட்டிய உருத்துள்ளவராய் இருந்தார். கிறிஸ்துநாதர் மரித்தவர்கள் இடையில் நின்று உத்தானமானர் என்ற வேதசத்தியத்தை இவர் அஞ்சாநெஞ்சுடன் யூதர் மத்தியில் பகிரங்கமாகப் போதித்து அதற்குச் சாட்சி பகர்ந்தபடியால் அவர் யூதரால் கொல்லப்பட்டு வேதசாட்சியாக மரித்தார். அவரைப் போல அவருடைய சகோதரருள் இருவர் வேதசாட்சி முடியைப்பெற்றுர்கள் அதில் ஒருவர் அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பர். மற்றவர் ஜெருசலேம் நகரத்தரான சிமியோன். யோசப் என்று இன்னுமொருவர் இருந்ததாக அறியக்கிடக்கிறது. யேசுக்கிறிஸ்துநாதருடைய ஒன்றைவிட்ட சகோதரர்கள் என்று மத்தேயு 13—15 சுவிசேஷத்திலே குறிக்கப்பட்டவர்களுள் இம்மூவரும் ஆவர்.

## இவருடைய அப்போஸ்தல சேவை

கிறிஸ்து நாதருடைய உத்தானத்தின் பின் வேதத்தைப் போதித்துக் கொண்டுவந்த அப்போஸ்தலர்கள் சத்திய மறையைத்தழுவிய தங்கள் ஞானப் புத்திரர்களுக்கு இடையிடையே நிருபங்கள் எழுதி இருந்தார்கள். அவைகளுள் வேதவாக்கியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வேதாகமத்தில்(Bible) காணக்கிடக்கும் நிருபங்களுள் அர்ச். யூதா எழுதிய நிருபமும் ஒன்றுண்டு. நிருபமோ வெகு சுருக்கமானது. என்றாலும் அதன் பாஷை நடையும் பொருளும்உன்னதமானது. மனத்தை வெகுவாக அருட்டி எழுப்பக்கூடிய ஞானமும் பொதிந்துள்ளது

"ததேய என்று சொல்லுக்குச் சீரிய பாஷையில் அர்த்தம் கபடமற்றவர், சாந்தமும் அன்பும் நிறைந்தவர்." ஆகவே அவர் தாழ்மையிலே உயர்ந்தவர் என்று அறியக்கிடக்கிறது. அவர் எழுதியநிருபத்திலும் தம்மை "கிறிஸ்துநாதரின் ஊழியனுகிய யூதா" என்று எழுதியதும் அவருடைய தாழ்மையைக்குறிக்கிறது.

## இலங்கையில் இவரின் பக்தி

முதன்முதல் 1951-ம் ஆண்டுதான் இவரின் பேரால் ஒரு சிற்றாலயம் இலங்கையில் — கம்பகா மீசாமைச் சேர்ந்த **இன்டிகொல்ல** என்ற இடத்தில் நிறுவப்பட்டது. இச்சிற்றாலயத்தைப் பெருப்பிக்கும் நோக்கமாக 1952-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ந் திகதி கொழும்பு அதிமேற்றிராணியாராகிய வந்தனைக்குரிய தோமாஸ்கூறே ஆண்டவர் அவர்களால இக்கோவிலின் மூலைக்கல் நாட்டப்பட்டது. அதிமேற்றிராணியாண்டவர் அவர்கள் றோமாபுரியிலிருந்து அர்ச். யூதா ததேயுவின் பரிசுத்த பண்டத்தைப் பெற்று இக்கோவிலுக்கு அன்பளிப்புச் செய்திருக்கிறார். [இக்கோவில் கம்பகா புகையிரத ஸ்தானத்திலிருந்து இரண்டு மைல் தூரமும் யக்கலைச் சந்தியிலிருந்து ஒரு மைலுமாகும்]. வாரந்தோறும் வியாழக்கிழமை மாலை இங்கு வரும் பலயாத்திரிகர்களின் தொகை அதிகரித்துக் கொண்டு வந்தது. அதற்காக நிரந்தரக் குருக்களின் அவசியம் ஏற்பட்டது. அதற்கியைய 1956-ம் ஆண்டு கார்மேற்சபைக் குருக்கள் அதிமேற்றிராணியாரால் வரவழைக்கப்பட்டு அவர்களே இக்கோவிலை இப்போது பராமரித்து வருகின்றனர். இங்கு கார்மேற்சபை மடம் ஒன்றும், ஞானஒடுக்கம் செய்வதற்கான ஒரு வீடும் இருக்கின்றன. அழகான ஒரு கோயில் தென்னஞ்சோலைகளுள் இன்று காட்சியளிக்கின்றது.

வாழ்க்கையில் ஆபத்து அல்லது அவநம்பிக்கை எங்களுக்கு ஏற்படும் பொழுது அர்ச். யூதா ததேயுவின் அடைக்கலத்தை இரந்து மன்றாடி ஆறுதல் அடைவோமாக!

— பி. க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**தை மாதம்—1964.**

| | | | |
|---|---|---|---|
| 19 | ஞா. | கத்தர் பிர. 2-ம் ஞாயிறு | [ப] |
| 20 | தி. | அர்ச். செபஸ்தியார் | [சி] |
| 21 | செ. | அர்ச். அக்னேசம்மாள் | ,, |
| 22 | பு. | அர்ச். அனந்தாசியா | ,, |
| 23 | வி. | அர்ச். இரமூந்தப்பர் | [வெ] |
| 24 | வெ. | அர்ச் திமேத்தேயு | [சி] |
| 25 | ச. | அர்ச். சின். மனந்திரும்புதல் | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு தை மாதம் 18-ந் திகதி**


# ஒற்றுமைப் பணி

கிறீஸ்துவை வழிபடுகிறவர்கள் கிறீஸ்தவர்கள். அவரைத் தம் சமய முதல்வராகக் கொண்டிருப்பவர்களும் அவர்களே.

ஒற்றுமையின் சின்னம் கிறீஸ்து. ஆயின் அவரை வழிபடுவதில் மட்டும் எவ்வளவோ வேற்றுமை.

உலகமடங்கிலுமுள்ள கிறீஸ்தவ திருச்சபைகளைக் கணக்கிடின் அவ்வெண்ணிக்கை நூற்றுக்கு மேலாகும்.

கத்தோலிக்கர், புரட்டஸ்தாந்தர். ஒதொடக்ஸ், அங்கிளிக்கன், ஆர்மீனியர் எனப் பல நாமங்களில் திருச்சபைகள் உண்டு.

அனைத்தும் மூலாதாரமாகக் கொள்வது பைபிள் எனப்படும் சுவிசேஷத்தையே.

இருந்தும் வேற்றுமை ஏன்?

ஆதியில் கிறீஸ்துவை வழிபடுவோர் ஒரேதலைமையில் ஒன்றித்தே செயலாற்றினர்.

மத்திய நூற்ருண்டுகளில்தான் பல்வேறு மாற்றங்களும் புகுந்தன.

சிறு காரணங்கட்காகவும் பிரிந்து சென்றனர். பிரிந்தவர்கள் தாமே திருச்சபைகளைத் தாபித்தனர்.

பிரிவினைச்சபைகட்கும் கத்தோலிக்கத்துக்குமிடையே ஒற்றுமைப்பாலம் அமைக்க முயன்ருேர் பலர்.

மறைந்த அருளப்ப தந்தையே அஞ்சாநெஞ்சினராய் அவ்வொற்றுமைபற்றிப் பகிரங்கப்படுத்தினுர்.

அருளப்பரின் திறந்த மனமும், நேர்மையுள்ளமும் ஒற்றுமை இயக்கத்துக்குப் பிரிவினைச் சோதரர்களிடை நல்மதிப்பைத் தேடித்தந்தன.

அருளப்பரின் வாரிசு சின்னப்ப தந்தை ஒற்றுமை இயக்கத்தை வெகுதிறமையாகவே கையாளுகின்ருர்.

அண்மையில் அவர் செய்த பலஸ்தீன யாத்திரை ஒற்றுமை இயக்கத்தில் ஒருபுதிய திருப்பமாக அமைந்துவிட்டது.

திறந்த உள்ளமும், நல்லபிப்பிராயமும், பொறுமையும் கொண்ட மனத்தினராய் நாம் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளுவோம்.

அந்த நல்லெண்ணம் சட்டரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் எம்மிடையேயுள்ள வேற்றுமைகளைக் களைந்துவிடும் என்ருர் பரிசுத்த தந்தை பலஸ்தீனுவிலே.

முதலில் எம்பிரிவினைச் சோதரர்களுடன் திறந்த மனத்தினராய் நட்புக்கொள்வோம்.

அடுத்த வாரத்தில் ஒற்றுமை இயக்கத்துக்கென அகில உலகிலுமுள்ள கிறீஸ்தவர்கள் பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றனர்.

கிறீஸ்துவை வழிபடுவோர் ஒரே தலைமையில் ஒன்று கூடுதல் வேண்டுமென அவ்வாரத்தில் சிறப்பாகப் பிரார்த்திப்போம்.

---

**"உங்கள் பிள்ளைஒன்று தேவஅழைத்தலினுலே ஆசீர்வதிக்கப்படுமானுல், அப்போது நீங்கள் முழந்தாட்படியிட்டு அதற்காகச் சருவேசுரனுக்கு நன்றியறிந்ததோத்திரம் சொல்லுங்கள். ஓர் ஆத்துமத்துக்கும் சருவேசுரனுக்குமிடையே குறுக்கிட்டு ஒருபோதுமே நிற்கவேண்டாம். உங்கள் பிள்ளைகளில் ஒன்றைச் சருவேசுரன் தெரிந்துகொள்வது மகாபெரிய ஆசீர்வாதமாகும். தேவஅழைத்தல் என்பது சருவேசுரன் தமதுபிள்ளைகளுக்கு அருளக்கூடிய மகாப் பெரிய கொடைகளுள் ஒன்ருகும்."**

— ஹீனன் மேற்றிராணியார்.

## கிறீஸ்தவ ஒற்றுமை இயக்கவாரம்
## 1964 தை 18—25

மேற்படி இயக்கம் சம்பந்தமாக 25-1-64 சனிக்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் மருதனுமடத்திலுள்ள கிறீஸ்தவ சேவா ஆசிரமத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடாத்தப்படும்.

பேச்சாளர்கள்

(1) மகா மேன்மைதங்கிய ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.,
(யாழ்ப்பாண மேற்றிராணியார்.)

(2) வண. டாக்டர் டீ. ரீ நைல்ஸ் அவர்கள்

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

இங்ஙனம்,
வண. எஸ். செல்வரத்தினம்,
பிரதம சேவகர்,
கிறீஸ்தவ சேவா ஆசிரமம்.
டி. எஸ். சாண்டேர்ஸ்,
மத, சமூக கல்விக்கான
கிறீஸ்தவகழக காரியதரிசி.

---

### உலகம் எதிர்பார்த்ததுபோல
# அவர் வரவில்லை

**V. அன்ரனி ஜோண்**

"பின்பு வீட்டில் பிரவேசித்துப் பாலனை அவர் தாயான மரியம்மாளோடுகண்டு, சாஷ்டாங்கமாகவிழுந்து அவரை ஆராதித்தார்கள். மேலும் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னும், தூபவர்க்கமும், மீறையும் அவருக்குப் பாதகாணிக்கையாக வைத்தார்கள்" (மத். 2—11).

மூன்று இராசாக்கள் திருநாளை ஆங்கிலத்தில் "எபிபனி" திருநாள் என்று அழைக்கிறோம். இச்சொல் ஆங்கிலச்சொல் அல்ல, ஆனுல், கிரேக்கசொல் ஆகும். கிரேக்க பாஷையில் "எபிபனி" என்ருல் வெளியாலே காட்டுவதாகும். ஆண்டவர் கீழ்த்திசையில் இருந்துவந்த மூன்று அரசர்களுக்குத் தம்மைக் காண்பித்தார். ஆண்டவர் மூன்று இராசாக்களுக்குத் தம்மைக் காண்பித்தது உலகமக்கள் அனைவருக்கும் காட்டினுர் என்பதற்கு அறிகுறியாக இருக்கிறது. இந்நன்னுளை யூதமக்கள் அல்லாத பிற இனத்தவர்களின் நத்தார்த்தினம் என்றும் அழைப்பது வழக்கம். கிறீஸ்துநாதர், அபிஷேகம்செய்யப்பட்டவர், உலகம் எதிர்பார்த்த மெசியாஸ், தனது சொந்தமக்களாகிய யூதர்களிடம் வந்தார். ஆனுல், அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. "அவர் தமது ஆதீனத்தால் வந்தார். அவருடையவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை." உலக இருட்டைப் போக்கும் உண்மையான வெளிச்சம் உலகுக்கு வந்தது. ஆனுல், உலகமோ அதைஅறிந்து கொள்ளவில்லை. ஏனெனில், உலகம் பாவத்தைவிரும்பியது. உலகம் வெளிச்சத்துக்குப்பதிலாக இருட்டை விரும்பியது. உலகமும், தீர்க்கதரிசிகளும் இவரை எதிர்பார்த்தார்கள்—ஏன் உலகம் இவரை ஏற்றுக் கொள்ளவில்லை? காரணம் உலகம் எதிர்பார்த்ததுபோல் அவர் வரவில்லை. உலகம் மெசியாஸ்என்பவர் ஓர் அரசனைப் போன்று வெகுதடபுடல்களோடும், மகிமையோடும் வருவார் என எதிர்பார்த்தது. ஆனுல், கிறீஸ்துநாதரோ, தாழ்மையுடனும், சாந்தத்துடனும், அடிமைக்கோலம்பூண்டு ஓர் ஏழை மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். அவர் பிறந்தபொழுது தாழ்ச்சியையும் அன்பையும் போதித்தார். உண்மையாகவே, கிறீஸ்துநாதர் உலகுக்கு எதிர்—முரண்பாடாய் இருந்தார்.

கிறீஸ்துநாதர் பிறந்தபொழுது ஒரு சிலர் அவரை ஏற்றுக்கொண்டார்கள். இன்னும் ஒரு சிலர் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. நல்லமனதுள்ளோர், தாழ்ச்சியுள்ளவர்கள், கடவுள் பற்றுதல் உள்ளவர்கள் இவரை ஏற்றுக் கொண்டார்கள். தற்பெருமை படைத்தவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இடையர்கள் தாழ்ச்சியுள்ளவர்கள் கிறீஸ்துநாதரை ஏற்றுக்கொண்டார்கள். கடவுள் எல்லாம் வல்லவர், அவரால் முடியாதது ஒன்றுமில்லை என்று நினைத்தார்கள். ஓ! தங்களின் ஞானக்கண்களினுல்—மாட்டுத்தொழுவத்தில் தங்கள் கடவுளைக் கண்டார்கள், ஆராதித்தார்கள், அன்பு செய்தார்கள். இடையர்கள் ஞான இடையனைத் தொழுவத்தில் கண்டார்கள். இரண்டாவதாக, புத்திமான்களான மூன்று இராசாக்கள் அவரிடம்வந்தார்கள். இவர்கள் தங்களுக்கு உலகத்தில் உள்ள எல்லாம் தெரியாதென ஒப்புக்கொண்டார்கள். இவர்கள் மாட்டுத்தொழுவத்தில் படுப்பவர் சாதாரண மனிதனல்ல என்று உணர்ந்தார்கள். புத்திமான்கள் ஞானத்தைக் கண்டார்கள். உலகஅரசர்கள் அரசர்களுக்கு அரசரைக் கண்டார்கள், கண்டு அவருக்குப் பொன்னும், தூபமும், மீறையும் ஒப்புக்கொடுத்தார்கள். பொன் கிறீஸ்துநாதர் ஓர் அரசர் என்பதைக் குறிப்பிடும; தூபம் அவர் கடவுள் என்பதைக் குறிப்பிடும், மீறை கிறீஸ்துநாதர் ஒரு மனிதன் (பலிப்பொருள்) என்பதைக் குறிப்பிடும்.

ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள், யூதர்கள், பரிசேயர்கள், சதுசேயர்கள் ஆவர். யூதர்களுக்கும் பரிசேயர்களுக்கும் கிறீஸ்துநாதர். ஒரு முட்டுக்கட்டையாய் இருந்தார். யூதர்களும், சதுசேயர்களும் தங்களின் சுயஇச்சைப்படி நடந்தார்கள். கடவுளின் வழியைக்கொண்டுவந்த மகா உன்னத தீர்க்கதரிசியை வெறுத்தார்கள் ஏரோதன், கொடுங்கோலன், தன்னுடைய இராச்சியத்தில்—அரசர்களுக்கு அரசருக்கு இடம்கொடுக்கவில்லை. மானிடரின் இருதயத்துள் அன்பின் அரசாட்சி புரியவந்த அன்புக் கடவுளுக்கு ஏரோதனின் இருதயத்துள் இடம் இலலை.

கிறீஸ்துநாதரின் வாழ்க்கை முழுவதிலும் இந்தத்தலைப்பு ஓடிக்கொண்டே இருந்தது. ஏற்றுக்கொள்ளுதலும், மறுத்தலும். ஒருசிலர் முழுநம்பிக்கையுடன் நோய்வாய்ப்பட்டவர்களை ஆண்டவரிடம் கொண்டுவந்தனர். மற்றவர்களோ இவருடைய வல்லமையை பேய்க்கு ஒப்பிட்டனர். பேயின் வல்லமையால் இதையெல்லாம் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்களின் தேகவியோகம்

யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல, இலங்கையின் ஏனைய பகுதிகளிலுமே "பி. எஸ்." எனப் பிரஸ்தாபமாக அறியப்பெற்றிருந்த பிரபல வைத்தியசிரோமணி டக்றர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள் காத்திராப்பிரகாரம் சென்ற ஞாயிறன்று பகல் காலஞ்சென்றாரெனப் பரவிய அமங்கலசெய்தியை அறியவந்து மனம்வருந்தாதார் இல்லையெனலாம். "ஈழத்தின் தமிழ்த்தாத்தா"வென்று எவராலுமே அருமைபாராட்டி அன்புடன் அழைக்கப்பெற்றுவந்த டக்றர் அவர்கள் தமது வைத்தியசேவை ஒரு சிறந்த சமூகசேவைஎன்பதைக் கருத்திற்கொண்டு — வைத்தியதொழிலுக்கு இருக்கவேண்டிய அனுதாபம், அன்பு, சீவகாருண்யமுதலாம் சீரிய இலட்சணங்களைத் தம்மிலே சிறப்பாகக்கொண்டு, இனபேதம், சனபேதம், மனபேதம், மதபேதமில்லாது தன்னுயிர்போல மன்னுயிரைமதித்து, எல்லோரையும் சமமாகப்பாவித்து ஆற்றிவந்த மகத்தான சேவையே அவரின் வைத்திய பிரஸ்தாபத்திற்குக் காரணம்என்க.

டக்றர் சுப்பிரமணியம் அவர்கள் இருபாலையைத் தமது ஜனனபதியாகக் கொண்டவர். அங்கே சில்லாலைப் பிரபல ஆயுள்வேதவைத்திய பண்டிதர் ஸ்ரீ அ. இன்னாசித்தம்பி அவர்களுக்குத் தமிழ்க்கலைபயிற்றிய நெல்லிநாத முதலியார் சேனாதிராசமுதலியாரின் வம்சத்தில் தோன்றியவர். அக்காலத்திலே இவர் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கட்டுமரத்திலே இந்தியகரையை அடைந்து சென்னைமாநகர்சென்று வைத்திய சாஸ்திரம்பயின்று, பின்னர் கல்கத்தாவைத்தியகல்லூரியில் 1904-ம் ஆண்டு டக்றர்எனப்படும் வைத்திய கலாநிதிப் பட்டம்பெற்றுக்கொண்டு இலங்கைக்குத் திரும்பியபின் அறுபது வருடகாலம் சிறப்பாகவைத்தியசேவை ஆற்றியிருக்கின்றார். அரசாங்கத்தின் கீழ் அவர் பதுளை, மட்டக்களப்பு, காலி முதலாம் இடங்களிலே சேவைஆற்றிய முப்பது ஆண்டுகளிலும் ஆயிரமாயிரம் பேரைக்கண்ட அருமருந்தன்ன வைத்தியராகத்திகழ்ந்து பெரும்புகழ் ஈட்டிக்கொண்டு யாழ்ப்பாணம்வந்து கடந்த முப்பதுஆண்டுகளாக இங்கு தனிப்பட்டமுறையிலே வைத்திய தொண்டாற்றிவரலாயினர்.

அந்தநாளிலே யாழ்ப்பாணத்தில் இரண்டொரு டக்றர்மாரே தனிப்பட்டமுறையில் வைத்தியத்தொழில் நடத்திவந்தனர். அதனால் டக்றர் சுப்பிரமணியம்அவர்கள் யாழ்நகரிலே கடற்கரைப் பக்கமாகத் தமது வைத்தியசாலையை அமைத்து வைத்தியத்தொழில் பார்க்கத்தொடங்கவே, அவரின் கைராசியும், அனுபவசித்தியும் காரணமாகப் பல்வேறிடங்களிலிருந்தும் பலவிதநோயாளிகளும் இரவும்பகலுமாக அவரிடம் சரியத்தொடங்கினார்கள். கடந்த முப்பது ஆண்டுகளிலும் அவர் எத்தனை ஆயிரமாயிரம் நோயாளர்களைக் குணப்படுத்தியிருப்பாரென்றும், எத்தனை ஆயிரமாயிரம் பேரின் கண்ணீரைத் துடைத்திருப்பாரென்றும்மதிப்பிடுவது அசாத்தியமாகும். அவர் கண்பட்டாலே போதும், கைதொட்டாலேபோதும் மாயமாக நோய் மறைந்துவிடுமென்று பேசிவந்தாரும் பலரே.

நிற்க, டக்றர் சுப்பிரமணியம் அவர்கள் பெருங் கொடைவள்ளல். கல்விஸ்தாபனம், சமயஸ்தாபனம் ஆதியவற்றிற்கும், மற்றும் பொதுசன சேவைகளுக்குமாக அவர் இனமத பாகுபாடில்லாது அள்ளியள்ளி மனத்தாராளமாகப் பொருள்வழங்கி யிருக்கின்றார். சுப்பிரமணியம் பூங்கா, தங்கம்மா மருத்துவவிடுதி, சுப்பிரமணிய மண்டபம் என்பனவாக ஆங்காங்கு நிறுவப்பட்டுள்ளபலவும் அவரின் வள்ளற்றன்மையை எடுத்துக்காட்டுவனவாகும். இத்தகைய ஒரு தமிழ்ப்பெரியாரின் மரணமானது எவர்க்குமே பெருங்கவலையைத்தந்தது ஆச்சரியமன்று. ஆகவே, தங்கள் கடைசி அஞ்சலியை அவருக்குச் செலுத்துமுகமாகப் பெரியோரும், சிறியோரும், ஏழைகளும், செல்வந்தருமாக அத்தனை பெருந்திரளானோர் சமூகமளித்தார்கள். அவர்களில் நமது மேற்றிராணியாண்டவர் அவர்களும், பலகுருப்பிரசாதிகளும் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பெரியாரின் மறைவானது தமிழ்ச்சாகியத்திற்கு ஈடுசெய்யமுடியாத ஒரு நஷ்டமேஎன்க.

---

கிறார் என்றார்கள். அப்போஸ்தலர்கள் இவரை, வழியும், உண்மையும், வாழ்க்கையும் என ஏற்றுக்கொண்டனர். ஆனால், யூதமக்களோ — இவனைச்சிலுவையில் அறையும் எனக்கூக்குரல் இட்டனர்.

இன்று உலகமக்கள் கிறீஸ்துநாதருக்குத் தங்கள் அன்பையும், வெறுப்பையும் எப்படி 2,000 ஆண்டுகளுக்குமுன் பலஸ்தீனாவில் உள்ள மக்கள் காட்டினார்களோ அப்படியே இன்றும் நமது நவநாகரிகமக்கள் காட்டுகிறார்கள்.

ஒரு பக்கம், கிறீஸ்தவமக்கள் இடையர்களோடும் மூன்று இராசாக்களோடும் சேர்ந்து கிறீஸ்துநாதரைத் தங்கள் கடவுள்என ஏற்றுக்கொள்ளுகிறார். ஆனால், நாஸ்திகர்கள், கம்யூனிஸ்தர்கள் கொடிய ஏரோதனின் அடிச்சுவட்டைப்பின்பற்றிக் கிறீஸ்துநாதரை எதிர்க்கிறார்கள், பகைக்கிறார்கள். திருச்சபையையும், குருப்பிரசாதிகளையும் கிறீஸ்தவர்களையும் துன்பப்படுத்துகிறார்கள்.

நாங்கள் கிறீஸ்துநாதரைப் பின்பற்றுகிறோமா? அல்லது அவரைப் பகைக்கிறோமா என ஆத்துமசோதனை செய்வோம். நாங்கள் கிறீஸ்துநாதரை நேசிக்கிறோம் என்று சொல்லிவிட்டு அவரின் பிரதிநிதியாகிய குருமார்களை; மேற்றிராணிமார்களைப் பகைக்கமுடியாது. அவர்களைப்பகைத்தால் கிறீஸ்துநாதரைப் பகைப்பதற்குச் சமனாகும். "உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான்", "உங்களைப் புறக்கணிக்கிறவன் என்னைப் புறக்கணிக்கிறான்", "சவுலே, சவுலே! ஏன் என்னைத்துன்பப்படுத்துகிறாய்".

எங்கள் இருதயத்தைத் திறந்து எங்கள் துன்பதுயரங்களையும், பரித்தியாகம், ஒறுத்தல் ஆகியவைகளையும் மூன்று இராசாக்களோடு சேர்ந்து ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

---

## இயற்கை வருணத்தில் புனிதயாத்திரை

பிரபல பிரிட்டிஷ் செய்திச் சுருள் சினிமா வெளியீட்டாளர்களான பேத் நிறுவனத்தார் பாப்புவின் புனிதயாத்திரையை மனோரம்மியமான வர்ணத்திரைப்படமாகத் தயாரித்துள்ளனர்.

இச்செய்திச் சுருள் முழுநேரத் திரைப்படமாக காட்டப்படும். பாப்பரசரின் யாத்திரை பற்றிய சகல விபரங்களும் தெளிவாக அடக்கப் பட்டுள்ளன.

இங்கிலாந்தில் அடுத்த வாரத்தில் திரையிடுவதற்கான முயற்சிகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

---

### நல்லூர் சுவாமி வண. ஞானப்பிரகாசர் ஞாபகார்த்தம்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 30-8-1875 | 22-1-1947 |

சீவியத்தில் நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்.

இவரது ஆன்மசாந்திக்காக தின்னவேலி அர்ச். சவேரியார் ஆலயத்தில் 22-1-64 பிற்பகல் 4-30 மணிக்கு ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

---

# மனிதனின் கடைசி முடிவு

ஆண்டவனால் மனிதன் சுபாவத்திற்கு மேலான அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டுச் சருவேசுரனைச் சுதந்தரித்துக்கொள்ளவும், மோட்சபேரின்ப பாக்கியத்தை அனுபவிக்கவும் அருகதையுடையவனாயுள்ளான். எனவே, இப்பெருங்கதியை நோக்கியே மனிதன் சீவிக்கவேண்டும். ஆறறிவிற் சிறந்த ஓரறிவாம் பகுத்தறிவைப் பெற்று, மாக்களில் இருந்து பிரிக்கப்பட்ட மக்கள், நித்திய சீவியபேரின்ப பாக்கியத்தையளிக்கும் மோட்சராச்சியத்தைச்சேரின் சருவேசுரனின் பலவரப்பிரசாதங்களையும் பெற்று, இவ்வுலகிற் பல புண்ணிய தர்மக்கிரியைகளைச் செய்தல்வேண்டும். மனிதனின் கடைசி முடிவுகள் அவன் கடைசியாக அடையவேண்டிய அந்தஸ்துக்களேயாகும். அவை மரணம், நடுத்தீர்வை, மோட்சம், நரகம், ஆகிய நான்குமேயாகும். எனவே இவைகளைத் தனித்தனி நோக்குவோம்.

## மரணம்

தேவனின் ஆலயமாக விளங்கும் சரீரத்தைவிட்டு ஆத்துமம் பிரிவதே மரணமாகும். ஆத்துமம் உடலைவிட்டுப்பிரிந்ததும் அவனின் சீவியம் அற்றுப் போகிறது. உடலோ மண்ணோடு மண்ணாகி மக்கி மடிந்துவிடுகினறது. இருந்தும் ஒருநாள் உயிர் பெறும் என்பது சருவேசுரனின் வல்லமையுள்ள வாக்குகளிலொன்றாகும். நாம் மரணத்தை ஒரு நிமிடம் நோக்கின் அது பூலோக வாழ்வை நாடித்தேடித்திரிந்து வாழ்ந்த பாவியான மனிதனுக்கு அளவில்லாத்துன்பத்தையும், பூலோக வாழ்வைத்தேடி நாடிய பக்திமானுக்கு அளவில்லாத ஆனந்தத்தை அளிப்பதையும் கண்ணுறலாம். ஆண்டவனால் அருமையாக அமைக்கப்பட்ட ஏதேன் எனும் சிங்காரத் தோப்பிலே, ஆதித்தாய் தகப்பனாகிய ஆதாமும், ஏவாளும் வாழ்ந்தனர். அவர்கள் சருவேசுரனுக்குக் கீழ்ப்படியாததினால் அவரிடம் சாவிற்குரிய சாபத்தைப் பெற்றனர். இல்லையேல் மனிதர் ஒருபோதும் சாகமாட்டார்கள் எனலாம். எனவே தான் உலக ஆரம்பத்தில் சருவேசுரனால் இடப்பட்டதீர்வை அன்றுதொட்டு இன்றுவரை நிகழ்ந்துகொண்டே வருகின்றது.

மரணமானது கள்ளனைப்போலும், கண்ணியில் அகப்பட்ட குருவியைப்போலும் சடுதியாக நிகழுமொன்றாகும். ஆயினும் ஒருவனுடைய சீவியம் எப்படியோ அப்படியே அவனுடைய மரணமும் ஆகும். எனவே, விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம், போன்ற முயற்சிகளைச்செய்தும், தேவதாயின் அடைக்கலத்தைப் பெற்றும், யேசு, மரியை, சூசை என்னும் திருநாமங்களை உச்சரித்தும் நாம் நல்ல மரணமடைய நம்மை ஆயத்தமாக வைத்திருத்தல் அவசியத்திலுமவசியமாகும்.

## நடுத்தீர்வை

ஒருவனுக்கு மரணம் உண்டென்பது எவ்வளவு நிச்சயமோ அதுபோன்று நிச்சயமாகத் தீர்வையுமுண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக அர்ச். சின்னப்பர், எல்லா மனிதரும் ஒருதரம் சாகவேண்டும் என்றும் அதன்பின் தீர்ப்பு நடக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருப்பதை வேதவாக்கியமாக எழுதிவைத்துள்ளார். நடுத்தீர்வை: தனித்தீர்வை, பொதுத்தீர்வை என இருவிசை நடைபெறும். மரணத்தின்பின் ஆத்துமம் ஆண்டவனின் சந்நிதியிலே தீர்ப்பைக் காத்துநிற்கும். சருவேசுரன் ஞானமும், அளவில்லா நீதியும் கோணாத நீதியுமுள்ளவர். எனவே, தீர்வையும் நியாயமானதாகவே இருக்கும். தெய்வீக வல்லமையுள்ள தேவன் ஒரு நொடிப்பொழுதில் அவ்வாத்துமத்தின் சீவியசரிதையை விசாரித்து, ஒவ்வொன்றிற்குமுரிய தீர்ப்பைக்கூறுவார்.

## மோட்சம்

சர்வ வல்லப சருவேசுரன், பரிசுத்த ஆத்துமாக்களுக்கு நித்திய சம்பாவனையளிக்கும் இடமே மோட்சமாகும். இது குறித்து யேசுநாதரும் அர்ச். மத்தேயு சுவிசேஷத்து 5-ம்அதிகாரத்திலே சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள், பரலோகத்திலே உங்கள் பலன் மிகுதியாயிருக்குமென்று தம் நிமித்தம் துன்பமடையும் சீஷர்களைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். நாம் இவ்வுலகிற் சருவேசுரனைச் சிருட்டிகளிலே மாத்திரம் காணமுடிகின்றது. ஆனால், மோட்சத்திலே அவரை முகமுகமாய்க் காணமுடியும். தேவன் எவ்விதம் தம்மை அறிந்து தம்மை நேசிக்கின்றாரோ, அதில் மோட்சம் செல்லும் ஒவ்வொருவரும் பங்களிக்கப்படுகின்றது. அங்கு நாம் ஆசிக்கும் சகல நன்மைகளும் ஏராளமாகக் கிடைக்கும். மோட்சத்திலே துக்கமோ, துயரமோ, கண்ணீரோ, கலக்கமோ, வெறுப்போ, பயமோ கிடையாது, அதாவது மோட்சபாக்கியமானது. நமது மனதிற்கும், வாக்கிற்கும் எட்டாத பாக்கியமாம். அத்தோடு மோட்சவாசிகளுடைய பாக்கியம் நித்தியமானதுமாகும். அன்பர்களே! ஒரு நொடிப்பொழுது நாம் பரலோகத்தை உற்றுநோக்கும் பொழுது பூலோகம் எவ்வளவு அருவருப்பாய் இருக்கின்றது இல்லையா?

பரலோகத்தின் பக்கத்தில் இன்னுமொரு பரிசுததமாகும் இடமுமுண்டு. தேவநீதிக்கியைய முழுதும் உத்தரியாத புண்ணிய ஆத்துமாக்கள் தங்கள் பாவக்கடன்களைத் தீர்க்க ஓர்இடம் செல்கின்றனர். அது எதுவென எண்ணுகிறீர்கள்? அதுதான் உத்தரிப்புஸ்தலமாகும். இது மனிதனின் நான்கு முடிவில் ஒன்றல்ல. இது மோட்சத்தோடு சேர்ந்ததாகும்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே !

வாழ்க்கையில் இன்பநிகழ்ச்சிகள் வந்தால் அகமகிழ்கிறோம்; துன்பியல் நிகழ்ச்சிகளின்போதோ எங்கள் சோதரிகளிடம் தாங்குஞ்சக்தி மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

"கர்த்தர் தந்தார் கர்த்தர்; எடுத்துக்கொண்டார். அவர் சித்தத்துக்குப் பணிவோம்" என்ற யோபுவின் கொள்கையோடு செயலாற்ற எமக்குப்பழக்கமில்லை. தனது அன்புக் கணவனை இழந்த ஜாக்குலின் சீமாட்டி இவ்விதத்தில் மாதர்களாகிய எமக்கு மிகுந்த முன்மாதிரிகையாகிறாள். "துணிவுக்குப் பெயர் ஜாக்குலின்" என்றகட்டுரை அந்நங்கையின் பண்புகளை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது.

அமரர் கென்னடியின் கொலையினால் மூன்று அமெரிக்க நங்கையர் விதவைகளாகினர். புனித நத்தார் தினத்தை அவர்கள் எப்படிக்கொண்டாடினர் என 'மூன்றுவிதவைகளின் கிறிஸ்மஸ்" விபரிக்கிறது.

இவ்விரு கட்டுரைகளையும் சோதரிகள் விரும்பி வரவேற்பார்களென எதிர்பார்க்கிறேன்.

ரோஜா.

## துணிவுக்குப் பெயர் ஜாக்குலின்

இல்வாழ்வின் இன்பத்தையே நேற்றுவரை கண்டவள் ஜாக்குலின் பவ்வியர் கென்னடி. இன்று அவள் விதவை. அது நடக்குமென யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆயின் அது நடந்தேவிட்டது.

திடகாத்திரமான கணவன். உறுதியான அவரது கொள்கைகள். வங்கியிலே லட்சக்கணக்கில் ரூபாய்கள். கொஞ்சிமகிழ இரு அழகின் அவதாரங்கள். ஜாக்கியின் வாழ்வு எத்தகையது? எந்தப்பெண்ணுமே பொறாமைப் படத்தக்க அளவினது.

மகிழ்ச்சி, குதூகலம் நிரம்பிய பிரயாணம். ஆரம்பித்த சொற்பநேரத்திலோ, துவண்டுவிழுந்தது கணவனின் சிரசு அத்தருணம். எந்தப் பெண்ணுமே அதிர்ச்சியால் பலதொல்லைகட்கு ஆளாகவேண்டிய நிலைமை.

அதிர்ச்சியை அடக்கினாள், துபரத்தைத் துறந்தாள். அவளது அவயவங்களும் சிந்தனையும் வேகமாகக் கடமையாற்றின. மருத்துவமனையை நோக்கி விரைந்தது மோட்டார். அந்த வேகத்திலும் அஞ்சாது எழுந்து கணவனை அணைத்து மடிமீது தாங்கிக்கொண்டாள்.

மருத்துவமனையிலே, பல நிபுணர்கள் எமனுடன் போராடிக் கொண்டிருந்தவேளை நெஞ்சத்தைக் கல்லாக்கிக்கொண்டு கணவனையே பார்த்தவண்ணமிருந்தாள். முதிய மருத்துவரொருவர் அவளிடம் வந்தார். இதையெல்லாம் உங்கள் பிஞ்சு இதயம் தாங்குமா? வெளியேசென்று சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

அந்த அழகோவியம் அளித்த விடை? "ஐயா மருத்துவரே விடை இரண்டிலொன்றுதான். எந்தமுடிவையும் இந்தஇதயம் தாங்கிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறது." மருத்துவர் ஆச்சரியமுற்றார். இவ்வித நிலையிலும் துணிவுகுன்றாத ஒருபெண்ணை யான் இதுவரை கண்டதில்லை என்றார்.

### ஒளி பிரிந்தது

ஜாக்குலினின் வாழ்வில் பத்துவருடங்கள் பிரகாசித்தஒளி பிரிந்துகொண்டிருந்தது. குருவர் இருவர் வந்தனர். இறுதிச்சடங்குகள் அளித்தனர். ஜாக்குலின் கணவனின் அருகே வந்தாள், இறுதிமுத்தம் தந்தாள். மணமோதிரத்தைக் கழற்றி மணாளனின் கரங்களில் அணிந்தாள்.

முழந்தாளில்நின்று இறைவனிடம் தனது கணவனின் ஆவியை ஒப்படைத்தாள். அவளது ஒளி பிரிந்தது. அத்தருணம் உலகனைத்தும் மற்றொரு செய்தியையும் கென்னடியின் மரணச் செய்தியுடன் எதிர்நோக்கியது.

"தாங்கமுடியாத சோகத்தால் புலம்பினாள் கென்னடி மனைவி"... "கணவனின் பிரிவால் அதிர்ச்சியுற்ற ஜாக்குலின்"... "மாரடைப்பால் மரணமானாள்" "அதிபரின் சடலத்தின்மேல் மூர்ச்சித்த மனைவி"... என்றெல்லாம் செய்திகள் வெளியாகுமென உலகம் எதிர்பார்த்தது.

ஆயின் ஜாக்குலின் என்ன செய்தாள். பொங்கிவந்த அழுகையைத் தடுத்து நிறுத்தினாள். துயரத்தின் நிலையால் தன் சிந்தனை மாறுபடாதிருக்க முயற்சித்தாள். இதயத்தை இரும்பாக்கிக் கொண்டாள். இறைவனின் சித்தத்துக்குப் பணிந்தாள். அடுத்துச் செய்யவேண்டியவற்றைச் சிந்தித்தாள்.

### லிங்கனின் வரிசை

கென்னடியின் சடலத்தை மருத்துவர் பாடம்செய்துகொண்டிருந்தவேளை, வாஷிங்டனிலுள்ள வில்லியம் வால்ரனுடன் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தாள் ஜாக்கி. சிறந்த ஓவியக்கலைஞர், நிர்மாண சிற்பி அவர்.

ஆபிரகாம் லிங்கனின் சடலம் வெள்ளைமாளிகையில் வளர்த்தப்பட்டபோது அந்தஅறை எத்தகைய விதத்தில் அலங்கரிக்கப்பட்டதென விபரித்தாள். வெள்ளைமாளிகையின் நூல்நிலையத்தில் இத்தனையாம் அலுமாரியில் உள்ள இத்தனையாவதுதட்டில் அதுபற்றிய விபரங்கள் இருக்கின்றன என்றும் கூறினாள்.

கென்னடியின் சடலம் வெள்ளைமாளிகையில் இராஜாங்க மரியாதையுடன் வளர்த்தப்பட்டிருந்த சமயம் அங்கு இறுதிமரியாதை செலுத்த வந்த தலைவர்கள், பிரமுகர்களனைவரும் விடுதலை வீரர் லிங்கனின் நினைவை அவ்வறை காட்டுகிறதென வியந்தனர். நிர்மாண சிற்பியைப் புகழ்ந்தனர்.

நிர்மாணசிற்பி வால்ரன் கூறினார்: "புகழுக்குரியவர் ஜாக்குலின்தான். துயரத்தின் எல்லையில் நின்றபோதிலும் பதட்டமில்லாது பொறுமையாகச் சகல ஏற்பாடுகளையும் தொலைபேசியில் எனக்கு விளக்கிக் கூறினார்.

### தேசத்தின் சொத்து

கென்னடியின் சடலத்தை எங்கே புதைப்பது? குடும்ப மயானத்தில் சமீபத்தில் இறந்த புதல்வனின் பக்கத்திலென கென்னடி குடும்பத்தினர் பலர் அபிப்பிராயப்பட்டனர். ஆயிரக்கணக்கில் மக்கள்வந்து தம்தலைவனுக்கு அஞ்சலிசெய்ய அந்த மயானம் இடமளிக்காதெனக் கர்தினால் குஷிங் கூறினார்.

அதிபர் லின்டன் யோண்சனும் மற்றையபிரமுகர்களும் ஜாக்கியின் விடைக்காகக் காத்திருந்தனர். எனது கணவனின் சடலம் இப்போது நாட்டின் சொத்து. வருங்காலத்தில் அவரது [illegible]தியாகம் மக்களால் நினைவுகூரப்படும். ஆர்லிங்டன் தேசிய மயானத்தில் லிங்கன் நினைவுச்சாலையை நோக்கியவண்ணம் கல்லறையை எழுப்புவோம் என்றாள் அவள்.

அனைவரும் ஜாக்கியின் பெருந்தன்மையை வியந்தனர். றொபேட் கென்னடியும் ஜீன் கென்னடியும் ஸ்தவத்துக்கு விரைந்தனர். தகுந்த இடத்தைத்தெரிவுசெய்தனர். ஞாயிறு காலை ஜாக்குலின் தானே ஆர்லிங்டன் சென்றாள். கல்லறை எழுப்பப்படும் இடத்தைப் பார்த்தபின் சம்மதம் தெரிவித்தாள்.

### விருப்புகளை நிறைவேற்றினாள்

கடற்படை வீரரில் ஒருவர் மாறிமாறிச் சடலத்தண்டை காவல்செய்ய வேண்டுமெனத் திட்டம் செய்ததும் ஜாக்குலின்தான். தனது கணவன் கடற்படையில் கொண்ட விருப்பை அவள் அறிவாள். கடற்படை வாத்திய கோஷ்டி அவள் குறிப்பிட்ட பாடல்களையே பிரேத ஊர்வலத்தின்போது இசைத்தது.

ஐரிஷ் வீரர்கள் அயர்லாந்திலிருந்து விமானமூலம் கொண்டுவரப்பட்டதற்கும் அவளே காரணம். ஐரிஷ் வீரர்களையிட்டு கென்னடி எப்போதுமே பெருமை கொண்டிருந்தார்.

தனது விவாகத்தின்போது ஆலயத்தில் இசைநிகழ்த்திய குழுவையே மத்தியூஸ் ஆசனக்கோவிலில் நடத்தப்பட்ட சடங்குகளின்போதும் பாட ஒழுங்குசெய்தாள். "எனதுகணவர் அடிக்கடி உங்களது கீர்த்தனைகளைக் குறிப்பிடுவார். எனது இன்பகரவாழ்வைத் தொடக்கிவைத்த நீங்களே அவரின் இறுதிச்சடங்குகளையும் மங்களகரமாக நிறைவேற்றிவிடுங்கள் என இசைக்குழுத்தலைவரிடம் கூறினாள்.

### நித்திய ஒளிப்பிழம்பு

கணவனின் கல்லறைக்கு முன்னால் ஒரு ஒளிப்பிழம்புகோல் நிறுவப்படல் வேண்டும். அது நித்தியமும் சுடர்விடல் வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்தவளும் ஜாக்குலினே. "அந்த ஒளியின் சுடர் நீலநிறமாக இருக்கவேண்டும். எனது கணவர் அந்நிறத்தையே பெரிதும் விரும்புகிறார்" எனவும் குறிப்பிட்டாள்.

ஜாக்குலினின் திட்டங்களை நிறைவேற்றப் பல பிரமுகர்களும், நண்பர்களும் கென்னடியின் சோதரர்களும் வெகுவாக உழைத்தனர். ஜாக்குலினுக்கு ஆறுதல் வருவிக்க வேண்டிய தருணத்தில் அவள் கூறிய யோசனைகளை அரங்கேற்றியதன்மூலம் அவளுக்கு மட்டுமல்ல எங்களுக்குமே ஆறுதல் தருவித்துக்கொண்டோம் என அவர்கள் கூறுகின்றனர்.

### குழந்தை வளர்ப்பு

கணவர் கென்னடி அமெரிக்க அதிபராகத் தெரிந்தெடுக்கப்பட்டவேளை பத்திரிகை நிருபர்கள் பலர் கென்னடி குழந்தைகளின் படங்களை எடுக்க விரும்பியபோது, ஜாக்குலின் கூறியவை ஒவ்வொருதாய்மாரும் சிந்திப்பதற்குரியது.

எனது கணவர் தன் சொந்தமுயற்சியாலேயே புகழைத்தேடினார்; இப்பெரும் பதவிக்கு வந்தார். எனது குழந்தைகள் தந்தையின் புகழினால் முன்னேறுவதை, புகழடைவதை யான் விரும்பவில்லை. அவைகளும் தங்கள் முயற்சியாலேயே முன்னேற வேண்டும்.

தந்தையின் பதவி, செல்வம் இரண்டும் தமது இருகுழந்தைகளின் எதிர்காலத்தையும் கெடுத்துவிடக்கூடாது என்பதில் ஜாக்குலின் அக்கறைகாட்டினாள். இப்போது பதவியை நோக்கி அவர்கட்குச் செல்வாக்கு கொடுக்கலாம். சிலவருடங்களின்பின் கணவர் தெரிவுசெய்யப்படாவிடில் குழந்தைகளின்நிலை என்ன? தாம்பெற்ற செல்வாக்குகள் திடீரென உதறித்தள்ளப்படுவது குழந்தையுள்ளங்களை எவ்வளவோபாதிக்கும் என அவர் அடிக்கடி குறிப்பிடுவார்.

அவரது முன்யோசனை மெச்சத்தக்கது. சாதாரண அமெரிக்க குழந்தைகள்போலவே வெள்ளைமாளிகையிலும் கரோலினும் யோனும் வளர்க்கப்பட்டனர். தந்தையின் திடீர் மரணத்தால் வெள்ளைமாளிகையைவிட்டு நீங்கியது அவர்களின் எதிர்காலத்தை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை.

### புதிய அலுவல்கள்

வெள்ளைமாளிகையில் அமெரிக்காவின் முதலாவது சீமாட்டியாகவிருந்தபோது ஜாக்குலின் அமெரிக்கர்களின் ஆதர்ஸ நங்கையாக விளங்கினாள். இப்பொழுதோ முன்மாதிரிகையைக் கற்பிக்கும நல்லதொரு அன்னையாகவும் காட்சிதருகிறாள்.

கணவனின் கல்லறையை அடிக்கடி தரிசிக்கவும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியைக் கண்காணிக்கவும் உதவும்படி வாஷிங்டனில் வசிப்பதென அவள் தீர்மானித்துள்ளாள்.

ஒவ்வொரு ஜனாதிபதியும் பதவியை விட்டு நீங்கியபின் அவர்நினைவாகப் பெரியதோர் நூல்நிலையம் அமைப்பது சமீபகாலமாக அமெரிக்காவில் இருந்துவரும் வழக்கம். அமரர் கென்னடியின் பெயரிலும் 60லட்சம் டாலர் செலவில் நூல்நிலையம் அமைக்கப் போகிறார்கள்.

இந்த நிலையத்தைக் கென்னடியின் நினைவை வருங்கால மக்களும், சரித்திர மாணவர்களும் பயின்றுகொள்ளும் வகையில் அத்துணை பிரமாண்டமானதாக நிர்மாணிக்கும் பொறுப்பு ஜாக்குலினிடம் ஒப்படைக்கப்பட்டுளது இதுவரை பதவியிலிருந்த எந்த ஜனாதிபதியின் மனைவியும் இவ்வளவு பெரும் நிர்வாகப்பொறுப்பைப் பெற்றதில்லை.

### நன்றிக் கடிதம்

அனுதாபச்செய்திகள், ஆறுதற்கடிதங்கள், பிரிவிரங்கற் பாக்கள் என்ற பலதினுசுகளாக ஜாக்குலின் கென்னடி இதுவரை பெற்ற தந்தி, தபால்களின் எண்ணிக்கை சொல்லுந்தரமல்ல. இவ்வளவுக்கும் பதிற்கடிதமெழுதுவது சாத்தியமா?

பிரமுகர்கட்குமட்டும் பதிலளித்துவிடுங்களென நண்பர்கள் சிபார்சு செய்தனர். ஜாக்குலின் கூறினாள்: எனது கணவரின்மேல் கொண்ட மட்டற்ற அன்புக்கு நாமும் கைப்மாறுகாட்ட வேண்டும், எல்லாச்செய்திகட்கும் பதில் எழுதவேவேண்டும்.

அனுப்பப்படும் பதில் கடிதத்தின் அமைப்பைத் தானே தயார்செய்தார்.

> தங்கள் மனநிறைந்த அனுதாபச்செய்தியை உள்ளன்புடன் ஏற்றுக்கொண்டு துயர் மிகுந்த இவ்வேளையில்என்னை நினைவுகூர்ந்தமைக்காக நன்றி தெரிவிக்கிறேன்.

என்பது அந்தவாசகம்.

இப்போது தினசரி இரண்டாயிரம் நண்பர்கள், சர்வகலாசாலைமாணவர்கள் ஆசிரியர்கள் என்போர் தங்கள் ஓய்வுவேளைகளில் ஜாக்குலின் தலைமையில் அனுதாபச்செய்திகளை ஒவ்வொன்றாக உடைத்துப் பதிலனுப்பும் அலுவலில் ஈடுபட்டுள்ளனர்.

ஆம், ஜாக்குலின் முன்மாதிரிகை எம் நங்கையருக்கு நல்லதோர் பாடமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று விதவைகளின் கிறிஸ்மஸ்

## 1. விதவை ஜாக்குலீன் கென்னடி

அமரர் கென்னடியின் மரணத்தால் அகில உலகினதும் அனுதாபத்தைப் பெற்ற முதல்நங்கை. பாரதியின் கனவுப்பெண்ணாக, சுதந்திரச் சிட்டாக, இளமையின் இன்பகரமான நிகழ்ச்சிகளிலே எழிலுடன் தாவியோடியவள்.

அந்த அழகுச்சிலையின் வாழ்வில் ஒரு திடீர்மாறுதல். ஒரு பயங்கரப் பேரிடி. ஆம், அழகி ஜாக்குலீன் விதவை. 34வயதில் மழலைமாறாத இரண்டு குழந்தைச் செல்வங்களுடன் இருள் நிறைந்த தனது எதிர்காலத்தின் முதலாவது கிறிஸ்மஸ்ஸைத் துணிவுடன் வரவேற்றாள்.

மார்கழி 24. அமெரிக்க பாம்பீச் நகர் கிறிஸ்மஸ் வைபவத்துக்காகப் பொருள்வாங்குவோரால் வோர்த் அவெனியூ வர்த்தகநிறுவனம் தேங்கிவழிந்தது. அத்தருணத்தில் ஓர் அழகிய மோட்டார்வந்துதரித்தது ஜாக்குலீன் தனது இரு செல்வங்களுடன் இறங்கினாள்.

சிலமாதங்கட்குமுன்னுபின் பொலிஸ் வாகனங்கள் முன்னும் பின்னும் பவனிவரும் வர்த்தக நிறுவனத்துக்கு 5மணித்தியாலங்களின் முன்பே இரகசிய காவலர்கள்வந்து காத்துநிற்பர். அமெரிக்காவின் முதற்சீமாட்டியைக் கண்டுமகிழ ஆயிரக்கணக்கானோர் காத்துநிற்பர். புகைப்பட, பத்திரிகை, தொலைக்காட்சியாளர் தொல்லை வேறு.

அன்றைய வாழ்வால் பெருமை கொள்ளாதவள் ஜாக்கி. இன்றைய நிலையால் மனம்தளரவில்லை. ஆயினும், நன்றிமிகுந்தோர்உலகில் எங்குமுண்டு. வர்த்தக நிறுவனத்தில் ஜாக்கியை முதலில் அடையாளம்கண்டவர் தன்பாட்டில் சென்றுவிடவில்லை. பக்கத்தில் இருந்தவரிடம் கூறினார். பக்கத்திலிருந்தவர் அடுத்தவருக்கு அறிவித்தார். ஆம், சொற்ப விநாடிகட்குள் அந்த வர்த்தக நிறுவனத்தின்முன் எக்கச்சக்கமான கூட்டம். ஆம், ஜாக்குலீனுக்குத் தங்கள் அன்பையும், அனுதாபத்தையும்காட்ட அந்தக்கூட்டம் காத்திருந்தது.

சிறுவன் ஜோணுக்கு விமானப் பொம்மைகள். சிறுமி கரோலினுக்குப் பாவைப்பிள்ளைகள். இன்னும் பல பொருட்கள் வாங்கவேண்டும். அதற்குள் நிலைமை மாறிவிட்டது. சனத்திரளால் போக்குவரத்து ஸ்தம்பித்தது. வர்த்தக நிறுவனங்களில் அல்லோலகல்லோலம். பத்திரிகை நிருபர்களின் கூட்டம் வேறு.

ஜாக்குலீனிடம் ஒருவர் வந்தார். "உங்கள் பாதுகாப்புக்குப் போதிய பொலிசார் இங்கு இல்லை. அபிமானம் நிரம்பிய சனத்திரளிலிருந்து உங்களைப் பாதுகாக்க ஒரேயொருவழிதான் உண்டு" என்றார். யார் நீங்கள்என ஜாக்குலீன் வினவினாள்.

"அமெரிக்க அரசாட்சியாளரால் தங்கள் பாதுகாவலுக்கென நியமித்துள்ள இரகசிய காவலர்கள். இதோ அடையாளப்பத்திரம்" எனக்காட்டினார். அவரைப்போல இன்னும்சில காவலர்கள் அங்கங்கே நின்றனர். அவர்களின் விருப்புக்கிணங்க ஜாக்குலீன் வெளியேவந்தாள். சனத்திரளை நோக்கி குறுநகைபுரிந்தாள். அனுதாபத்துடன் அக்கூட்டம் அவளுக்கு வழிவிட்டது. தனதுமோட்டாரில் ஏறிக்கொண்டு வீட்டைநோக்கிச் சென்றாள். நன்றிமிகுந்த மக்கள்என அவள்உதடுகள்கூறின.

ஜாக்குலீனின் தோழிகள் பின்னர் வர்த்தக நிறுவனம்சென்று பொருட்கள் அனைத்தையும் கொணர்ந்தனர். கிறிஸ்மஸ் வைபவத்துக்காகக் கென்னடி குடும்பம் முழுவதும் பாம்பீச்மாளிகையில் திரண்டிருந்தது. அனைவரும் ஜாக்குலீன்வரவை ஆவலுடன் பார்த்திருந்தனர். ஜாக்கி வந்திறங்கியதும் யோசவ் கென்னடி அவளை அணைத்துக்கொண்டார். கென்னடியின் அம்மா அவளை அனுதாபத்துடன் பார்த்தாள். றேபேஸ், ஈதல், ரெடி, பொபி முதலிய கென்னடி சகோதரர்கள், சகோதரிகள் அனைவரும் துயரம்நிரம்பிய உள்ளத்தால் அவளை வரவேற்றனர். யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? அனைவரும் தங்கள் அன்புக் கென்னடியை இழந்துவிட்டார்களே.

பாம்பீச் மாளிகையிலுள்ள சிற்றாலயத்தில் இராப்பூசை நடந்தது. வழக்கமாகக் கென்னடி உட்காரும்இடம் காலியாக வைக்கப்பட்டிருந்தது. பூசை முடிந்ததும் சிறுவிருந்து. பின்னர் ஜாக்குலீன் தனது குழந்தைகளுடன் புறப்பட்டாள். பின்னால் சில லாரிகள் கென்னடி குடும்பத்தினர் அளித்த நத்தால்வெகுமதிகளைச் சுமந்துசென்றன.

கிறிஸ்மஸ்தினத்தில் ஜாக்கி பலஅலுவல்களைச் செய்யவேண்டியிருந்தது. தனது நெருங்கிய நண்பர்கட்குக் கிறிஸ்மஸ்பரிசுகளை அனுப்பினாள். கார்தினால் குஷிங் ஆண்டகை உட்படச் சில மேற்றிராணிமார், அமெரிக்க அதிபர் லிண்டன் ஜோண்சன்போன்ற சிலஅரசியல் வாதிகள், வெள்ளைமாளிகையில் கடமையாற்றும் அதிகாரிகளின் குடும்பங்கள், கென்னடி குடும்பத்தினர், மற்றும் தனது நெருங்கிய தோழிகள் அனைவருக்கும் பரிசுகள் அனுப்பினாள். தனது கணவனை நினைவுறுத்தும் பல பொருட்களை அப்பரிசுகளில் வைத்திருந்தாள் ஜாக்கி.

கரோலினும், ஜோணும் பலகாரங்களைச் சாப்பிட்டுக்கொண்டு தங்கள் பொம்மைகளுடன் மகிழ்ச்சியாக விளையாடினர். உங்களுக்குத் தெரியுமா? எனது அப்பா மோட்சத்திலிருக்கிறார் என ஜோண் வீட்டிற்கு வந்தவர்கள் எல்லோரிடமும் கூறினான். அங்குவந்தவர்கள் இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கண்ணீர்விட்டனர். ஆயின், ஒருகுரவரோ என் சின்னநண்பனே நீ கூறுவது முற்றிலும் உண்மைஎன உணர்ச்சியுடன் கூறினார்.

தனிமைமிகுந்த ஜாக்கி அன்று தனியாய்இருக்க நண்பர்கள் விடவில்லை. அத்துடன் கணவர் கென்னடியின் இறுதிஉயிலும் மனைவியிடம் அளிக்கப்பட்டது.

ஒருகோடிடாலர் பெறுமதியான கென்னடியின் பெரியதோட்டத்தில் பாதியை ஜாக்குலீன் பெற்றாள். மறுபாதி சமபங்குகளாகக் கரோலினுக்கும், ஜோணுக்கும் கிடைக்கும். 1954-ம் ஆண்டில் கென்னடி தம் மனைவியின்பெயரில் வங்கியில் கட்டியபணம் 25லட்சம் டாலர்கள். தாம் இறந்தவுடன் அவை மனைவியிடம் அளிக்கப்படல்வேண்டுமென விதித்துள்ளார்.

இவைதவிர கென்னடியின் இல்லத்தைச்சேர்ந்த சகலபொருட்கள், மற்றும் கென்னடி குடும்பத்தவரின் நிறுவனங்களிலிருந்து வரும்பங்குப்பணம் அனைத்தும் ஜாக்குலீனுக்குக் கிடைக்கும். அமெரிக்க அரசாங்கமும் விதவைகளான அமெரிக்கஅதிபர்களின் மனைவிகட்கு வருடாவருடம் இளைப்பாற்றுநிதி அளிக்கிறது.

"இவைகளனைத்தும் இருண்டுவிட்ட எனது வாழ்க்கையில் ஒளியை உண்டாக்க மாட்டா" என ஜாக்குலீன் ஏக்கத்தோடு கூறினாள். வாஷிங்டனில் குடியேறித் தனது குழந்தைகளின் நலனில் அக்கறையெடுப்பதுடன் தனது கணவரின் நினைவாக அமெரிக்கஅரசாங்கம் அமைக்கப்போகும் மிகப்பெரிய நூல்நிலையத்தின் நிர்வாகஅமைப்பில் கவனம் செலுத்துவதுமே தனது வேலைகள்எனக் கிறிஸ்மஸ்தினத்தன்று மாலை ஜாக்குலீன் கென்னடி கூறிமுடித்தாள்.

## 2. விதவை மரியா ரிப்பிற்

கென்னடியின் கொலைஞனைத் தடுத்து நிறுத்தும்போது அவனால் சுட்டுக் கொல்லப்பட்ட டல்லஸ் அரசாங்க பொலீஸ்காரரின் துணைவி. அவளையும் அமெரிக்கமக்கள் அன்று மறக்கவில்லை.

தனது மூன்று புதல்வர்களுடன் (அலென் 14வயது பிரெண்டா 10வயது. கேட்டிஸ் 5வயது) கிறிஸ்மஸ்மரத்தை அலங்கரித்தாள் மரியா. குழந்தைகட்குப் பலகாரங்களும், பொம்மைகளும் கொடுத்துத் தந்தையைப் பிரிந்த ஏக்கத்தை அவர்கள்மனதில் நிலைக்காது செய்தாள்.

பின்னர் தனது பெற்றோர்களையும், கணவரின் பெற்றோர்களையும தரிசிக்கச் சென்றாள். இப்பிரயாணத்தின்போது மோட்டார்விபத்தில் மரியா சிக்குண்டாள். தலையில் சிறுகாயங்களும் உண்டாயின.

ஏராளமான அமெரிக்கர்களிடமிருந்து கிறிஸ்மஸ் வாழ்த்துகளையும், பரிசுப் பொருட்களையும் பெற்றாள் மரியா. அவர்களில் பலரை அவளுக்குத் தெரியாது. கணவனின் மரணத்தால் ஏற்பட்ட அனுதாபமே அவைகளை அவளிடம் கொணடுவந்தன.

டல்லாஸ் பொலீஸ் தலைமைக் காரியாலயம் "மரியா பாதுகாப்பு நிதி" யொன்றைத் திரட்டிவருகிறது. கிறிஸ்மஸ் தினத்தன்று இந்நிதியின்தொகை 4லட்சம் டாலர்களாக உயர்ந்துவிட்டது.

எனது வருங்காலத்தையிட்டு அமெரிக்கமக்கள் கொண்டிருக்கும் அக்கறைக்கு என்ன கைம்மாறு செய்வேன்? என நன்றியுடன் கிறிஸ்மஸ்தினத்தில் கூறிய மரியாவிடமிருந்து கணவனைப் பிரிந்ததுயரம் இன்னுமே நீங்கவில்லை.

## 3, விதவை மரீனு ஒஸ்வால்ட்

கென்னடிக்கு அமரத்துவ பாக்கியம் தந்த ஒஸ்வால்ட்டின் இளம்மனைவி ரஷ்யாவில் பிறந்த மரீனுவுக்கு வயது 22. ரஷ்யாவுக்குவந்த இந்தஅமெரிக்க இளைஞனை யாவரும் வெறுத்தொதுக்குவது கண்டு இரக்கமுற்று அவனைத் திருமணம் செய்துகொண்டவள். கணவனின் சர்வாதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுக் கணவனே தெய்வமென வாழ்ந்தவள்.

தன் இல்வாழ்வில் இன்பத்தையே அறியாதவள். பலதடவை வாழ்க்கையில் வெறுப்புற்று, கணவனைப் பிரிந்து சென்றும் பின்னர் அவனில் இரக்கங்கொண்டு திரும்பிவந்து வாழ்க்கைநடத்தியவள்.

அவளது கிறிஸ்மஸ் முதல்தடவையாக மகிழ்ச்சிமிக்கதாய் இருந்ததெனலாம். இரகசியப் பொலிசார் கண்காணிப்பை நீக்கிவிட்டனர். கணவனின் கண்டிப்பு, அவன் இறந்தபின் பொலிசாரின் கண்காணிப்பு இவையெல்லாம் கிறிஸ்மஸ்சுக்கு முதல்தினம் நீங்கிவிட்டன. எனவேஅன்று சுதந்திரப்பறவையானாள். கிறிஸ்மஸ் இராஆராதனைக்குச்சென்று திரும்பினாள். தனிமையாக, தனது சிறு குழந்தைகட்காக (ஜுான் 2வயது, ராக்கேல் 2மாதம்) ஒரு கிறிஸ்மஸ்மரத்தை ஆயத்தம்செய்தாள்.

அமெரிக்கமக்கள் இந்த ரஷ்யப் பெண்ணைக் கிறிஸ்மஸ் தினத்தன்று தவிக்கவிடவில்லை. 20பெரிய தபாற்சாக்குகளைத் தபால்வாகனங்கள் கொண்டுவந்து இறக்கின. ஆச்சரியத்துடன் மரீனு அவற்றைத் திறந்தாள். குழந்தைகட்காகப் 15பொம்மைகள், மரீனுவுக்குத் துணிமணிகள், மற்றும்பல உபயோகமான பொருட்கள், அத்துடன் உபகாரிகள் பலர் திரண்டு மரீனுவின் வாழ்க்கைநலனுக்காக 23ஆயிரம்டாலர் கொண்ட பணமுடிப்பொன்றை அவளிடம் தந்தனர். இந்த நிகழ்ச்சிகளினூடே அன்றுதினம் கணவனின் கல்லறையைத் தரிசிக்கவும் அவள் மறக்கவில்லை.

கணவனை இழந்ததுயர் ஒருபுறம். அமெரிக்க நண்பர்கள் காட்டிய பேருதவி மறுபுறம். கொலைகாரன் மனைவி என ஒதுக்கவில்லையேஎன்ற ஆச்சரியம் இன்னொருபுறம்.

இந்த உணர்ச்சிகளால் நிரம்பிய மரீனு கூறினாள்: இந்தக் கிறிஸ்மஸ் என்வாழ்விலேயே மிகச் சிறந்ததொன்று. இதுவரை இப்படிப்பட்ட கிறிஸ்மஸ்ஸை யான் அனுபவிக்கவில்லை. இனிமேலும் அனுபவிக்கப் போவதில்லை.

சா. பெ.

### மனிதன் பிரயாணி

உலகம் என்பதோர் நீண்டவழி — இங்கு
ஒவ்வொரு மனிதனும் பிரயாணி
சிலசில வழிகளில் தங்கிச் சென்று — மறுவுலகு
சேர்வார் மனிதர் இதை நீ அறி.

•

ஒவ்வொரு நாளும் முடிவை நோக்கி — இந்த
உலகமும் மனிதரும் செல்கின்றார்
மலரும் வாழ்வும் நீர்க்குமிழி — இந்த
வையத்தின் சொந்தமும் நீர்க்குமிழி.

•

பூவில் பயணம் தொடங்கிய நாம் — எங்கு
போகிறோம் என்பதை நினைந்திடுவோம்
சாவில் பயணம் முடிந்துவிடும் — பின்பு
சாகா வாழ்வு தொடங்கிவிடும்.

•

துன்பம் வரினும் துயர்வரினும் — சத்தியம்
துணையாய்க் கொண்டு வழிநடப்போம்
இன்பம் பொங்கும் மறுவாழ்வடைய — நாம்
ஏகுவோம் நல்வழி இவ்வுலகில்.

ஆசிரியர் ; ச. அமிர்தநாதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த தந்தையின்............

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

பாப்பரசர் பிரான்சிய மொழியில் பேசினர். அவரது குரல் அடைத்துப் போயிருந்தது.

"அன்பார்ந்த சகோதரர்களே, கிறீஸ்துவில் நமக்கு மிகவும் பிரியபிள்ளைகளே!

"இப்புனிதமான தலத்தில் உங்களுடன் சிலவார்த்தைகள் பேசுவதை விரும்புகிறேம். ஆசீர்வாதப்பர்சபைத் துறவிகளும் மற்றும் பலசபைகளின் அங்கத்தவர்களும் எம்மை வரவேற்க இங்கு காத்திருந்தமைக்காக நன்றி கூறுகின்றேம். இங்குள்ள நல்லெண்ணம் கொண்ட மனிதர்கட்கும் எல்லா கத்தோலிக்க மக்களுக்கும் எமது நல்லாசியை அளிக்கின்றேம்.

"கிறீஸ்து வதிந்த இப்புனித பூமியில் வசிக்கும நீங்களனைவரும் அவரது வழியிலேயே ஒழுகுதல் வேண்டும். சகவாழ்வுக் கொள்கையினராய் பிறர்சிநேகமுள்ளவர்களாக விளங்குதல் வேண்டும். சமாதானத்துக்காகவும், சகவாழ்வுக் கொள்கைக்காகவும் பிரார்த்திப்பதே எமது இந்த யாத்திரையின் புனித நோக்கமாகும்."

பின்னர் பாப்பரசர் மான்டெல்பம் வாயிலுக்கு வந்தார். அங்கு இஸ்ருயேல் ஜனதிபதியும் பிரமுகர்களும் பாப்புவை வழியனுப்பக்காத்திருந்தனர். மாபெரும் இராஜரீக உபசாரவைபவமொன்று திறந்த வெளியரங்கில் நடாத்தப்பட்டது. தமது நாடு அண்டைநாடுகளுடன் சமாதானமாக வாழவே ஆசிக்கிறதுஎன இஸ்ரவேல் அதிபர் இவ்வைபவத்தில் குறிப்பிட்டார்.

## புனித உச்சிமாநாடு

உலகெங்கணுமுள்ள கிழக்கத்திய ஒதொடக்ஸ் திருச்சபையின் தலைவரான அத்தன கோரஸ்பத்திறியாக்குவை பாப்பரசர் பின்னர் தரிசித்தார். இஸ்ருயேலிலிருந்து பாப்பரசர் திரும்பியபின் ஒலிவமலையில் இச்சந்திப்பு நிகழ்ந்தது.

500 வருடங்கட்குப் பின்னர் பரிசுத்த பாப்பு கிழக்கத்திய ஒதொடக்ஸ் சபைத்தலைவரைச் சந்திப்பது இதுதான் முதல் தடவை. வரலாற்றுச் சிறப்புவாய்ந்த இச்சந்திப்பின் போது பாப்பரசர் 77வயதுடைய பத்திறியாக்குவிடம் கிறீஸ்தவ ஒற்றுமைபற்றிக் குறிப்பிட்டார்.

"எங்கள் கதவுகளை அகலத்திறந்து இப்பிரச்சனைபற்றி மனம்விட்டுப் பேசுவதற்கு உங்களனைவரையும் அழைக்கின்றேம். இவ்வொற்றுமை சம்பந்தமாக ஏராளமான பிரச்சனைகள் கொள்கைரீதியாகவும் வேதாகமமுறைகளிலும், சட்டப்பிரமாணங்களிலும் எழும் என்பதை நாமறிவோம்.

"முதலில் எங்களிடையேயுள்ள பிரிவினைகளை அகற்றிக்கொண்டு ஒருவரையொருவர் நன்கறிந்து கொள்ள முயற்சிப்போம். இது பின்னர் நடைபெறப்போகும் பேச்சுவார்த்தைகட்கு நல்ல பயனைத்தரும்.

"இச்சந்திப்பையிட்டு எவ்வளவாக எமதுமனம் களிகூர்கின்றதென்பதை எடுத்துரைக்கவார்த்தைகளில்லை. இம்மகிழ்ச்சியை அனுபவிப்பது நாம் மட்டுமல்ல எம்முடன் எமது திருச்சபையும் வத்திக்கான் பொதுச்சங்கமும் இந்நிகழ்ச்சியையெண்ணி அகமகிழ்கின்றது.

"இன்று நாம் தம்மைவிட்டுப் பிரியும்போது கூறும் வார்த்தைகள் தற்காலிகமாக நம்மிடையேயுள்ள பிரியாவிடையாகவே இருக்கட்டும். கழிந்தகாலத்தைப் போல நிரந்தரமாக வேண்டாம். எமது யாத்திரையின்போது பலஸ்தீனத்துக்கு வருகைதந்து எம்முடன் சந்திக்கவும் முன்வந்த தமதுசெயலை எந்நாளும் எம்மால் மறக்கவியலாது.

தங்களை விட்டுப்பிரியும் இத்தருணத்தில் மீண்டும் தங்களை தரிசிக்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் செல்கின்றேம்" என்றார் பாப்பு.

77வயதுடைய அத்தனகோரஸ் 13கோடி கிழக்கத்திய ஒதொடக்ஸ்திருச்சபையினரின் தலைவர். கருமையான அங்கிகளை அவர் தரித்திருந்தார். பாப்பரசரின் உரையை அவர் வரவேற்று அடுத்த சந்திப்பை தாம் ஆவலுடன் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

1054-ல் கத்தோலிக்கசபையிலிருந்த பிரிந்த கிழக்கத்திய ஒதோடக்ஸ்சபை தனது தலைவராகப் பத்திறியாக்கு ஒருவரைக் கொண்டு இயங்கிவருகிறது.

## பெத்லேகேமில்

தமது புனித யாத்திரையின் கடைசித்தினமாகிய திங்களன்று பாப்பரசர் பெத்லேகேமுக்குச் சென்று கிறீஸ்துபிறந்த புனித தலத்தைத் தரிசித்தார்.

மக்கள வெள்ளத்தைப் பொலீசாரால் கட்டுப்படுத்தமுடியாமல் இராணுவத்தை அழைக்கவேண்டியிருந்தது.

அங்கு பாப்பு திவ்விய பூசை நிறைவேற்றி ஜெபித்தார். அத்தினம் மூவிராசாக்கள திருநாளாகும்.

பெத்லேகேமில் கிறீஸ்து அவதரித்த புண்ணிய தலத்தை தரிசிக்க பாப்பரசர் பொன், தூபம், மீறை ஆகியபொருட்களை சுமந்து சென்றார். அங்குகிறீஸ்தவ ஒற்றுமைக்காக பிரார்த்தித்து தவ்விய பூசை நிறைவேற்றினர்.

## சேவா ஆசிரமத்தில் ஒற்றுமை இயக்கம்

மருதனுமடத்திலுள்ள கிறீஸ்தவ சேவா ஆசிரமத்தில் இம்மாதம் 18-ந் தேதி தொடக்கம் 25-ந் தேதி வரை கிறீஸ்தவ ஒற்றுமை இயக்கவாரத்தைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அகில உலகிலுள்ள கிறீஸ்தவர்களனைவரும் இவ்வாரத்தில் தம்மிடையேயுள்ள பிரிவினைகள் நீங்கி ஒரே தலைமையில் ஒன்றிக்கும்படியாக வேண்டிக்கொள்வார்கள்.

இப்பிரார்த்தனை வாரத்தின் இறுதித்தினமாகிய 25-ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்குப் பொதுக்கூட்டம் ஆசிரமத்தில் நடாத்துவதற்காக இயக்கத்தின் காரியதரிசி அனைவருக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

எங்கள் மதிப்புக்குரிய மேற்றிராணியார் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்களும், அறிஞர் வண. நைலஸ் அவர்களும் இப்பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்கள்.

# மனிதனின் கடைசி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

## நரகம்

அர்ச். மத்தேயு 25-ம் அதிகாரத்திற் பொதுத்தீர்வையிற் குற்றவாளிகளாகக் காணப்பட்டபாவிகள் நித்திய ஆக்கினைக்குப்போவார்களென்று வசனித்திருக்கிறார். ஆகவே, சாவான பாவத்தோடு மரணமடைபவன் வேதனைப்படும் இடம் நரகமாகும். இம்மையில் தீயோருக்கு மறுமையிற் கிடைப்பது நரகமேயாகும். ஆயின் பாவிகளை அடியோடு அழிக்காமல் அவர்களை நாளுக்குள், நொடிக்கு நொடி அகோரமாய்வாட்டும் கொடிய நெருப்பு நரகத்தில் உண்டு நரகாக்கினை நித்தியமானதும் முடிவில்லாததுமாகும். ஆதலால், கத்தோலிக்கர்களாகிய நாங்கள் நரகம் நித்தியமானதென்பதை மறுக்கமுடியாதவர்களாகவுள்ளோம். சாவானபாவ அந்தஸ்திலுள்ளவன் நரக பாதாளத்தின் விளிம்பில் இருக்கின்றவனுகின்றான். அவனைச் சடுதியாகவரும் மரணம் உள்ளே தள்ளிவிடுகிறது. நல்ல கிறிஸ்தவர்களாய் நாம் சீவிக்கின் நரகத்திற்குச் செல்லமாட்டோமென்பது தீர்மானமல்லவா?

ஆகவே, மனிதனின் கடைசியான முடிவுகளை அறிந்துகொண்டோம். அம்முடிவுகளில் நாமடையவேண்டிய முடிவைத்தெரிந்து கொள்வோம். தெரிந்துகொண்டு அதற்கு எங்களை ஆயத்தப்படுத்துவோம்.

ச. சவிரிமுத்து.

புனிதவளனர்,
பயிற்சிக்கலாசாலை,
கொழும்புத்துறை.

## திரு. பி. எம். வேதநாயகம், B. A. அவர்கள்

சென்ற 17 ஆண்டுகளாகப் பலாலி ஆசிரிய பரீட்சைக்கலாசாலையில் ஆங்கில பாஷை, ஆங்கில இலக்கியம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் விரிவுரையாளராகவும், கலாசாலையின் ஆங்கிலப் பகுதியின் தலைவராகவும் கடமையாற்றிய திரு. பி. எம். தேவநாயகம், B. A. அவர்கள் தற்போது இளைப்பாறியிருக்கிறார்

ஆசிரிய பரீட்சைக் கலாசாலைக்குச் செல்லு முதல் திரு. வேதநாயகம் இளவாலை அர்ச். ஹென்றிக்கப்பர் கல்லூரியில் பல வருடங்களாகப் போசிரியராகவும், கிரமவதிகாரியாகவும் சிறந்த சேவை புரிந்தார். சமூகக் கல்வியைப் பற்றி இவர் இயற்றிய அநேக புத்தகங்கள் பாடசாலைகளில் அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. காலாகாலமாக உலகில் பெரியோர் மதித்துவந்த இலட்சியங்களில் மக்களை நிலைநாட்டக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் உபயோகித்து வந்தவரான திரு. வேதநாயகம் அவர்களுக்கு எல்லோரின் அன்பும் நன்றியும் என்றும் உரித்தாகும்.

முன்னாளில் கத்தோலிக்க சமயத்துக்காகப் போராடச் சென்ற வீரர்களின் போர்க்கருவிகளைப் பாப்பரசர்கள் ஆசீர்வதித்தனர். நாமோ கத்தோலிக்க எழுத்தாளர்களின் பேனாவை ஆசீர்வதிக்கின்றேம். அந்தப் போர்க்கருவிகளிலும் பார்க்க அதிகவேலையை இப்பேனாக்கள் செய்து முடிக்கும்என்பது எமது திடமான நம்பிக்கை.

— 13-ம் சிங்கராய பாப்பு


நெற்பயிர்,
மரக்கறி,
புகையிலை,
தென்னை
மற்றும்
பழமரங்கட்கும்,
பூங்கன்றுகளுக்கும்
தேவையான



சி. சி. சி.
பசளைக் கலவைகளை
எங்களிடமிருந்து பெற்று விவசாயத்தில்
அதிக லாபம் பெறுங்கள்.
உங்கள் தேவைகளுக்கு
இன்றே எழுதுங்கள்.
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம் டெலிபோன்: 496.
தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன்: 577.


இப்பத்திரிகை 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம்ஆண்டு தைமாதம் 18-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org